

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2041 | மே 6, 2010 | புரட்சி 9 | முழக்கம் 17 | விலை: ரூ.2.50

### திருச்சி கிறித்தவ கல்லறையில் தீண்டாமைச் சுவர்

## ஆகஸ்ட் 15க்குள் அகற்ற கழகம் கெடு

கரிகாலன் தலைநகராகக் கொண்டு ஆண்ட களம், மணற்பரப்பில் கட்டப்பட்ட பழைமையான கல்லணையைக் கொண்ட நகரம், சமணர்களின் சிறப்புடன் வாழ்ந்த பகுதி என்றெல்லாம் பழம் பெருமைகளையும் அண்ணா பல்கலைக்கழகம், ஐ.ஐ.எம், ஐ.டி பார்க் என நவீன முகங்களையும் பன்னாட்டு நுழைவாயில்களையும் ஒருங்கே பெற்றுள்ள திருச்சி மாநகரத்தின் மற்றொரு கோர முகத்தை பெரியார் திராவிடர் கழகம் அம்பலப் படுத்துகிறது. அக்கோர முகத்தை அகற்றும் பணியை யும் தொடங்கியுள்ளது. திருச்சி வேர் ஹவுஸ் கல்லறை. திருச்சியில் இன்னும் மனிதநேயமுள்ள, நாகரீக எண்ணமுள்ள மனிதர்கள் வாழ்கிறார்களா என்ற கேள்விக்குறியை எழுப்பியுள்ளது இக்கல்லறை.

தமிழ்நாட்டின் மையப்பகுதியான திருச்சி மாநகரின் மையப்பகுதியில் மேலப்புதூர் பாலத்துக்கு கிழக்கே அமைந்துள்ளது இந்த வேர் ஹவுஸ் கல்லறை. பழைய கோவில் பங்குக்கு கட்டுப்பட்ட இக்கல்லறை அமைய மறைந்த லூர்துசாமி இடம் வழங்கியுள்ளார். இக்கல்லறையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரையும் ஆதிக்கசாதியினரையும் ஒரே இடத்தில் புதைப்பதைத் தடுப்பதற்காக கல்லறைக்கு குறுக்கே மிகப்பெரிய உறுதியான தீண்டாமைச்சுவர் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

சுவருக்கு ஒருபுறம் உப்புப்பாறை, செங்குளம் காலனி, மல்லிகைபுரம், கெம்ஸ் டவுன், கூனி பஜார், காஜாப்பேட்டை ஆகிய பகுதிகளில் வாழும் பறையர்களும் சக்கிலியர்களும் புதைக்கப்படு கின்றனர். மறுபுறம் பழைய கோயில், இருதயபுரம், எடத்தெரு ஆகிய பகுதிகளில் வாழும் அப்பகுதியின் ஆதிக்கசாதியான பிள்ளைமார்கள் புதைக்கப்படு கின்றனர். இருபகுதிகளிலும் சமாதியில் சிலுவைதான் ஊன்றப்படுகிறது. இரு பகுதியினரும் கிறித்தவ மதத்தின் ரோமன் கத்தோலிக் என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள் தான்.

இந்து மதத்தில் தமிழர்கள் தாம் வாழும் கிராமங் களில் இன்றுவரை தாழ்த்தப்பட்டோருக்கும் பிற்படுத்தப்பட்டோருக்கும் தனித் தனிச் சுடு காடுகளை உருவாக்கி தீண்டாமையை நிலைநிறுத்தி வருவதை நாம் பார்த்துக்கொண்டுதான் இருக் கிறோம். இந்து மதத்திலிருந்து மாறுபட்ட கிறித்தவ மதத்தில் ஒரே மதத்தில் ஒரே பிரிவில் இந்து மதத்தின் உண்மை முகமான ஜாதி - தீண்டாமைக் கொடுமை, சுடுகாட்டிலும் தாண்டவமாடுவதை இப்பொழுது தான் கேள்விப்படுகிறோம். இக்கொடுமையை பல ஆண்டுகளுக்கு முன்பே பெரியார் கண்டித்துள்ளார். போராடியும் உள்ளார். அப்போராட்டம் தொடர வில்லை. தீண்டாமைச் சுவரும் உடைத்தெறியப் படவில்லை. அக்கடமையை பெரியார் விட்ட இடத்திலிருந்து பெரியார் திராவிடர் கழகம் கையிலெடுத்திருக்கிறது.

கடந்த 2010 மார்ச் மாதத்தில் திருச்சி நகரம் முழுக்க 8 இடங்களில் இத்தீண்டாமைச்சுவரை அகற்றக் கோரி தொடர் பிரச்சாரக்கூட்டங்களை பெரியார் தி.க நடத்தியுள்ளது. 14.04.2010 அன்று திருச்சி மாவட்டக் காவல்துறையின் ஒரு பிரிவான தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளிடம் இந்தத் தீண்டாமைச் சுவரை அகற்றக்கோரி நேரடியாக ஒரு கோரிக்கை விண்ணப்பத்தையும் அளித்தது. ஒரு மாத காலம் நடைபெறும் “ஜாதி-தீண்டாமைக்கு எதிரான பெரியார் கொள்கைப் பரப்புரைப் பயண”த்தின் ஒரு கட்டமாக 24.04.2010 அன்று திருச்சி ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி, தீண்டாமைச்சுவரை அகற்றும் போராட்டத்தை அறிவித்துள்ளார்.

அவர் தனது உரையில், “இந்திய விடுதலை நாளாகக் கருதப்படும் ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்குள் அரசே தலையிட்டு திருச்சி வேர்ஹவுஸ் கல்லறையில் உள்ள தீண்டாமைச் சுவரை அகற்ற வேண்டும். இதற்காகவே - இது போன்ற தீண்டாமைக் கொடுமை களைக் களைவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள காவல்துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அத் தீண்டாமைச் சுவரை அகற்றுவதற்கு உரிய நட வடிக்கைகளை எடுத்து அகற்ற வேண்டும். அப்படி அரசும் தீண்டாமை ஒழிப்புப்பிரிவும் தமது கடமையைச் செய்யாவிட்டால் பெரியார் திராவிடர் கழகம் தனது கடமையைச் செய்யும். முதல் கட்டமாக **ஆகஸ்ட் 15 அன்று திருச்சி மாவட்ட தீண் டாமை ஒழிப்புப் பிரிவு அலுவலகம் இழுத்துப் பூட்டப்படும், அச்சுவர் அகற்றப்படும்வரை தொடர்ந்து போராட்டங்கள் நடைபெறும்”** என அறிவித்தார்.

### மே 28 முல்லை பெரியாறு உரிமை கோரி ம.தி.மு.கவின் சாலை மறியலில் கழகம் பங்கேற்கிறது

முல்லைப் பெரியாறு உரிமை மீட்க மறுமலர்ச்சி தி.மு.க. மே 28 இல் தமிழகத்திலிருந்து கேரளம் செல்லும் அனைத்து வழிப்பாதைகளிலும் மறியல் போராட்டம் அறிவித்துள்ளது. இந்தப் போராட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் வரவேற்கிறது. போராட்டத்தில் பங்கேற்கக் கோரி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ., கழகத் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர்களுக்கு தனித்தனியே கடிதம் எழுதியுள்ளார். வேண்டுகோளை ஏற்று பெரியார் திராவிடர் கழகமும் போராட்டத்தில் பங்கேற்க முடிவு செய்துள்ளது.

மே 28 சாலை மறியல் கிளர்ச்சிக்கு கழகத் தோழர்களே ஆயத்தமாவீர்!

(பங்கேற்கும் ஊர், இடம் பின்னர் அறிவிக்கப்படும்)

**– பெரியார் திராவிடர் கழகம்.**

## தோழர் பத்ரிக்கு வீரவணக்கம்!



சென்னையில் மறைந்த தோழர் பத்ரிநாராயணன் நினைவு நாளில் கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தோழர்களுடன் வீரவணக்கம் செலுத்தினர். (ஏப்.30 - 6 ஆம் ஆண்டு நினைவு நாள்)

## கிலானி கைதுக்கு கழகம் கண்டனம்

அகில இந்திய ஹுரியத் மாநாடு கட்சியின் தலைவர் சையத் அலி ஷா கிலானி அவர்களது கைதைக் கண்டித்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி விடுத்துள்ள அறிக்கை:

அகில இந்திய ஹுரியத் மாநாடு கட்சியின் தலைவர் சையத் அலி ஷா கிலானி, ஏப்ரல் 30 அன்று மத்திய காவல்துறையினரால் ஜம்முவில் கைது செய்யப்பட்டுள்ளார். ஆனால் அவர் எங்கு வைக்கப்பட்டுள்ளார் என்ற விவரங்களை இது வரை காவல்துறை வெளியிடவில்லை. 80 வயதை கடந்த மூத்த தலைவரான அவரின் இருப்பிடம் அறியாமல் காஷ்மீர் மக்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளனர்.

கடந்த பல ஆண்டு காலமாக காஷ்மீர் மக்களின் தன்னுரிமைக்காக தொடர்ந்து போராடி வரும் சையத் அலி ஷா கிலானி, ஒரு மிகச் சிறந்த மனித உரிமை செயற்பாட்டாளர் ஆவார். கடந்த ஏப்ரல் 15 அன்று தில்லி தமிழக மாணவர்கள் ஒன்றியம் நடத்திய ‘பேசப்படாத இனப்படுகொலை: இலங்கையின் போர்க் குற்றங்கள்’ என்ற தலைப்பிலான மாநாட்டில் அவருடன் கலந்து கொண்டேன். அந்த மாநாட்டில் அவர் ஈழ மக்களுக்கு தனது உறுதியான ஆதரவினையும், இலங்கையின் போர்க் குற்றங்களுக்கு தனது வலிமையான கண்டனத்தையும் பதிவு செய்ததை நினைவு கூர்கிறோம்.

இப்படி மூத்தத் தலைவர் ஒருவரை கைது செய்வதும் அவரது இருப்பிடத்தை வெளியிடாமல் இருப்பதும் இலங்கையை முன் மாதிரியாகக் கொண்டு செயல்படும் நடவடிக்கையாகவே இருக்கிறது.

இந்தியாவும் இலங்கையின் வழியில் தனது போர்க்குற்ற நடவடிக்கைகளை தொடர்வதாகவே தோன்றுகிறது.

தன்னலமற்று தனது மக்களின் விடுதலைக்காகப் போராடி வரும் அம்மூத்த தலைவரைச் சட்டத்திற்குப் புறம்பாக தடுத்து வைத்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறோம். அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென வற்புறுத்துகிறோம்.

நாள் : 01.05.10 — கொளத்தூர் தா.செ.மணி

இடம் : மேட்டூர் அணை — தலைவர், பெரியார் திராவிடர் கழகம்

(குறிப்பு: அடுத்த இருநாள்களில் கிலானியின் இருப்பிடம் கண்டறியப் பட்டு, அவர் விடுதலை செய்யப்பட்ட செய்தி கிடைத்துள்ளது)

**தலையங்கம்**

# சாதி ஒழிப்புப் பரப்புரையும் இந்தியப் பார்ப்பனியமும்

சாதி, தீண்டாமைக்கு எதிராக கொளுத்தும் வெயிலில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14 ஆம் தேதி தொடங்கி, தொடர்ந்து பரப்புரைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்கள். இரண்டு வாரங்கள் நிறைவடைந்து, மூன்றாவது வாரத்தில் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. சமூகத்தின் மிகப் பெரும் நோய் சாதியும், அந்த அமைப்பு பிரிக்க முடியாத இரும்புச் சங்கிலியாய் பிணைத்து வைத்துள்ள தீண்டாமை ஒடுக்குமுறையுமாகும். இங்கே ஏழை, பணக்கார வர்க்கங்களைக்கூட தீர்மானிக்கும் சக்தியாக சாதியமைப்பே இருக்கிறது. அண்மையில் இந்தியா முழுதும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வும், இந்தக் கருத்தையே உறுதிப்படுத்துகிறது. (The Human Development in India: Chellenges for a Society in Transition) குடும்பத்தின் வருமானம், நிலம், விவசாய வருமானம், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட இந்த ஆய்வில், பல்வேறு சமூகக் குழுக்களிடையே உள்ள வேறுபாடுகள் கணக்கிடப்பட்டன. வாழ்வாதாரங்கள் கிடைப்பதற்கும், சாதிக்கும் இடையே உள்ள தொடர்புகளை இந்த ஆய்வு வெளிக் கொண்டு வந்திருக்கிறது. மிகவும் கீழ்நிலையிலே ஆதிவாசிகளும், தலித்துகளும் மிகவும் முன்னேறிய நிலையிலே முன்னேறிய பிரிவு சாதி மற்றும் மைனாரிட்டிப் பிரிவினரும், இடைப்பட்ட நிலையிலே பிற்படுத்தப்பட்ட சாதிகள் மற்றும் முஸ்லீம்களும் உள்ளதாக ஆய்வு உறுதி செய்கிறது. எனவே வர்க்க ஏற்றத் தாழ்வுகளுக்கே சாதியே அடிப்படையாக இருப்பதை இந்த ஆய்வு வெளிக் கொண்டு வந்துள்ளது.

சாதியமைப்பை இந்தியாவில் பார்ப்பனிய பனியா ஆதிக்கத்தைப் பேணும் இந்திய அரசு கட்டிக்காத்து வருவதோடு, அதை ஒழிப்பதற்கான சர்வதேச முயற்சிகளையும் தடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் மட்டுமின்றி, உலகின் பல்வேறு நாடுகளில் குடியேறி, அங்கு வளமுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தியர்கள்கூட சாதியைக் கைவிடவில்லை. இதனால், சாதியம் என்ற பார்ப்பனியம், உலக நோயாக பரவிக் கிடக்கிறது. பிரிட்டனில் இன வேறுபாடுகளைத் தடுப்பதற்காக சமத்துவச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட இருக்கிறது. (Equality Act-2010). பிரிட்டனில் குடியுரிமை பெற்று வாழ்ந்து வரும் பார்ப்பனர் மற்றும் உயர்சாதி இந்துக்கள், சாதியைப் பிடிவாதமாக பின்பற்றி வருவதால் இந்தச் சட்டத்தில் சாதி பாகுபாட்டையும் இணைக்க வேண்டிய அவசியமிருக்கிறது. இது பற்றி பிரிட்டனில், மனித உரிமை ஆணையத்திடம் கருத்து கேட்கப்பட்டுள்ளதாக பிரிட்டன் நாடாளுமன்றத்தில் கூறப்பட்டாலும், அப்படி கருத்து ஏதும் கேட்கப்படவில்லை. பிரிட்டனிலுள்ள பார்ப்பன உயர்சாதியினர், இந்தச் சட்டத்தில் சாதியைச் சேர்க்க வேண்டாம் என்று வலியுறுத்திய காரணத்தினால், அவர்களின் கருத்துதான் பிரிட்டினில் வாழும் இந்தியர்கள் கருத்தாகவே கருதி, பிரிட்டிஷ் அரசும் பார்ப்பனியத்துக்கு அடிபணிந்துவிட்டது. பிரிட்டன், அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள், தங்கள் குடும்பத்தின் இளைய சமூகத்தினர், சாதி விட்டு காதலித்து திருமணம் செய்ய விரும்பியபோது அதைத் தடுத்து வருவதாகவே செய்திகள் வருகின்றன. (ஏப். 18 இல் ‘இந்து’ நாளேட்டில் இது பற்றிய விரிவான கட்டுரை ஒன்றை பிரிட்டனிலிருந்து அரவிந்த் சிவராமகிருஷ்ணன் என்பவர் எழுதியுள்ளார்).

சாதி இந்தியாவில் மட்டுமே இருந்த நிலை மாறி, வெளிநாடுகளுக்கு பார்ப்பன உயர்சாதியினரும் அந்த பாகுபாட்டை தூக்கிக் கொண்டு போய்விட்டதால், சாதி, இப்போது இந்தியாவையும் தாண்டிய பிரச்சினையாகிவிட்டது. அய்.நா.வின் மனித உரிமைக்கான ஆணையாளராக இருப்பவர் தென்னாப்பிரிக்காவில் வாழும் தமிழரான நவநீதம் (பிள்ளை) எனும் பெண். அவர் உலகம் முழுதும் 260 மில்லியன் மக்களிடம் சாதிய ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. இதில் 170 மில்லியன் மக்கள் இந்தியாவில் இருக்கிறார்கள் என்று கூறியுள்ளார்.

2001 ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவில் டர்பன் நகரில் நடந்த அய்.நா.வின் இனவெறி எதிர்ப்பு மாநாட்டில், இந்தியாவிலிருந்து 200க்கும் மேற்பட்ட சாதிஒழிப்பு அமைப்புகள் டர்பன் சென்று சாதியையும், இனப் பாகுபாடாகக் கருத வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தினர். (அதில் பெரியார் திராவிடர் கழகமும் பங்கேற்று இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியது) இந்தியா இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்ததால் அய்.நா.வும் ஏற்கவில்லை.

மீண்டும் அய்.நாவின் மனித உரிமை ஆணையம் 2010-11 ஆம் ஆண்டுக்கான மனித உரிமை செயல்பாடுகளுக்கான திட்டங்கள் பற்றி ஆய்வறிக்கை ஒன்றை தயார் செய்தது. அதில் சாதி பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றிருந்ததை இந்தியா ஏற்கவில்லை. சாதியை அய்.நா. தனது ஆவணத்தில் கொண்டு வரவேகூடாது என்று ஜெனிவாவில் உள்ள (ஜெனிவாவிலும், நியுயார்க்கில் உள்ளதுபோல் அய்.நா. அலுவலகம் செயல்படுகிறது) இந்திய அலுவலகத்துக்கு டெல்லியிலிருந்து கட்டளைகள் பறந்தன. திட்டமிட்டு அய்.நா.வின் 160 பக்க ஆவணத்தில் சாதியும், இனப் பாகுபாடே என்ற கருத்து முற்றாக புறந்தள்ளப்பட்டுவிட்டது. 160 பக்க ஆவணத்தில் 3 இடங்களில் மட்டுமே சாதி என்ற பெயர் பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வளவுதான். நேபாளத்தில் மட்டும் சாதி மிகக் கடுமையாக உள்ளதாக அய்.நா.வின் செயல்திட்ட ஆவணம் குறிப்பிடுகிறது. இந்தியாவின் பார்ப்பன ஆட்சி, இப்படி ஒரு நிலை எடுத்திருந்தாலும், நேபாளத்தில், இப்போது நடக்கும் இடதுசாரிகள் கட்சி, சாதி வேறுபாட்டையும், இனவேறுபாட்டையும் பிரித்துப் பார்க்கவே முடியாது என்றும், எனவே நேபாளத்தில் சாதிக் கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைக்க அய்.நா.வுடன், இணைந்து செயல்படத் தயாராக இருப்பதாகவும் திட்டவட்டமாக அறிவித்துவிட்டது. நேபாளத்தின் இந்த அறிவிப்பை பாராட்டி வரவேற்கிறோம். நேபாளத்தில் 2007 ஆம் ஆண்டு வரை இந்து அரசே அதிகாரத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஆனாலும், இந்தியாவின் பார்ப்பன ஆட்சி, இங்கேயும் சாதியமைப்பைப் பாதுகாத்துக் கொண்டு, உலகில் பரவி நிற்கும் சாதியமைப்பையும் கட்டிக் காப்பதற்கு, அய்.நாவின் தலையீட்டிலிருந்து சாதிக் கொடுமையை ஒதுக்கி வைப்பதற்கான, அத்தனை தீவிர நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறது. ஆட்சிகள் மாறினாலும், ஆளும் பார்ப்பனர்களிடம் தங்கியுள்ள அதிகாரங்கள் மட்டும் மாறாமல், அப்படியே நீடிப்பதை உணர முடியும். சாதியால் பாதிக்கப்பட்ட சமூகத்தினருக்கு நீதி வழங்க இடஒதுக்கீடு அமுல்படுத்தப்பட்டால், “சாதியைப் பார்க்கிறார்களே?” என்று கூச்சல் போடும் பார்ப்பனர்கள், வேறு நாடுகளுக்குப் போனாலும் சாதியை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருப்பதையும் அய்.நா.வின் தலையீட்டைத் தடுப்பதையும் கவனித்தால் சாதி, சமூக ஒடுக்குமுறையாளர்களின் வலிமையான ஆயுதமாக விளங்குவதைப் புரிந்து கொள்ள முடியும். இந்த நிலையில்தான் தமிழகத்தில் வேறு எந்த அமைப்பும் செய்ய முன்வராத கசப்பான தொண்டை சமூகத்தின் நோய் தீர்க்க பெரியார் திராவிடர் கழகம் தன்மேல் சுமந்து கொண்டு செய்து வருகிறது.

சாதி - தீண்டாமைக் கொடுமைகளை மக்கள் மன்றத்தில் விளக்கி, விழிப்புணர்வூட்டும் இந்தத் தொண்டு மகத்தானது; பாராட்டத்தக்கது. எதிர்கால சாதி ஒழிப்பின் சரித்திரப் பக்கங்களில் இந்தப் பயணங்களின் பதிவுகளை மறைக்க முடியாது; பெரியார் தொண்டர்களின் பயணம் தொடரட்டும்!

# தயார் நிலையில் ஒரு கொள்கைப் படை!



கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம், எப்போதும் தயார் நிலையில் இருக்கும் போர்ப் படை! எந்த ஒரு பிரச்சினையானாலும் சில மணி நேர அறிவிப்புக்குள்ளே ஆர்ப்பாட்டத்துக்கும் மறியலுக்கும் தயாராகி விடுவது அவர்களின் தனித்துவமான போர்க் குணம்.

கோவை மாநகரில் தமிழர்கள் உரிமைகளுக்காக முதல் போர்க் குரல் பெரியார் திராவிடர் கழகத்திடமிருந்துதான் ஒலிக்கும். மலையாளிகள் கோரப் பிடியில் சிக்கித் தவித்த ரயில்வே பிரிவை மீட்டு, சேலம் கோட்டத்தை உருவாக்கியதில் பெரும் பங்காற்றிய பெருமை கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத்துக்கே உண்டு. பின்னர், அனைத்துக் கட்சிகளும் இந்த நியாயமான உரிமைப் போராட்டத்துக்கு வரச் செய்ததே பெரியார் திராவிடர் கழகம் நடத்திய தொடர் போராட்டங்கள் தான்.

கழகத்தின் பொதுச்செயலாளர் செயலூக்கி கோவை இராமகிருட்டிணன் வழிகாட்டுதலில் இயங்கிக் கொண்டிருக்கும் இதே கழகச் செயல் வீரர்கள்தான் அவரது தலைமையில் வாகனத்தையே மறித்து, ஈழப் போராட்டத்தின் வரலாற்றில் கழகத்தின் போர்க் குணத்தை உலகுக்கே வெளிச்சப் படுத்தியவர்கள்.

மக்களை ஈர்க்கும் போராட்ட வடிவங்களைத் தேர்வு செய்வதிலும் இவர்களுக்கு நிகர் இவர்களே தான். தமிழ்நாடு முழுதும் அம்பேத்கர் பிறந்த நாளை வழமைபோல் சிலைகளுக்கு மாலை போட்டு கொண்டாடிக் கொண்டிருந்தபோது, இவர்கள் மட்டும் அதை ஒரு முக்கிய கோரிக்கைக்கான போராட்ட வடிவமாக்கினர். அம்பேத்கர் திரைப்படத்தை வெளியிடாமல் அலட்சியப்படுத்தும் மத்திய அரசுக்கான போராட்டமாக அம்பேத்கர் உருவத்தை முகமாக்கி அணிந்து போராடினார்கள்.

இதுதான் கோவை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம்; போராட்டம் பற்றிய செய்தி இதோ!

மத்திய அரசுக்கு சொந்தமான தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழகத்தின் தயாரிப்பில் நடிகர் மம்முட்டி நடித்து மூன்று தேசிய விருதுகளைப் பெற்ற “பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர்” திரைப்படத்தை 12 ஆண்டுகளாக திரையரங்குகளில் திரையிடாமல் மத்திய அரசு முடக்கி வைத்திருப்பதைக் கண்டித்து உடனடியாக திரையிடக் கோரி மத்திய அரசை வலியுறுத்தி கோவையில் 13.4.2010 அன்று கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டினன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தோழர்கள் அம்பேத்கர் உருவ முகமூடி அணிந்து பங்கேற்றனர்.

**பங்கேற்ற அமைப்பினர்**

தீண்டாமை ஒழிப்பு முன்னணி பொறுப்பாளர் வழக்கறிஞர் வெண்மணி, மூத்த வழக்கறிஞர் சி. முருகேசன், அருந்தமிழர் விடுதலை இயக்க இளவேனில், நாம் தமிழர் இயக்க வழக்கறிஞர் ஆனந்தராசு மற்றும் கவிஞர் ரகுபதி, ஆதித் தமிழர் பேரவை மற்றும் விடுதலைச் சிறுத்தையினரும் பங்கேற்றனர்.

கழக மாநகர செயலாளர் வே. கோபால், அலுவலக பொறுப்பாளர் சா. கதிரவன், மாநகர அமைப்பாளர் இ.மு.சாஜித், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் ந. பன்னீர்செல்வம், கலங்கல் வேலு, து.இராமசாமி, ரஞ்சித் பிரபு, நிர்மல்குமார், தம்பு, நாகராசு, தமிழரசன் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்களும் பங்கேற்றனர்.

– ‘இரா’

## கழகப் பயிற்சி முகாம்கள்

மே 22, 23 - சேலம்

மே 29, 30 - மதுரை

மேற்குறிப்பிட்ட தேதிகளில் கழகப் பயிற்சி முகாம்கள் நடைபெற இருக்கின்றன. சேலம் மாவட்ட, மதுரை நகர கழகத் தோழர்கள் பயிற்சி முகாம்களுக்கான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

# 8 ஆயிரம் பேரை பலிக்கொண்ட போபால் கொடுமையும் ராஜீவ்காந்தி மரணமும்

*ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தாயார் 80 ஆவது வயதில் கடும் நோயால் பாதிக்கப்பட்டு தமிழகத்துக்கு சிகிச்சைக்கு வந்தால் 'விடமாட்டோம்' என்கிறார்கள். தமிழ்நாடு என்ன, கண்டவர்கள் நுழையும் 'தர்ம சத்திரமா' என்று பார்ப்பனத் திமிரோடு கேள்வி கேட்கிறார், சுப்ரமணியசாமி. இந்த எதிர்ப்புகளுக்கு முன் வைக்கப்படும் காரணம் என்ன? ராஜீவ் கொலை!*

*ஈழ விடுதலைப் போராட்டத்தையே ராணுவத்தால் ஒடுக்கிட அனைத்து உதவிகளையும் செய்தது சோனியா, மன்மோகன் ஆட்சி! காரணம் என்ன சொல்லப்பட்டது? அதே ராஜீவ் சாவுதான்!*

*19 ஆண்டுகள் சிறைவாசம் முடிந்த பிறகும் நளினியை விடுதலை செய்யக் கூடாது. அவர் மரணத்தை சந்திக்கும் வரை சிறைக்குள்தான் இருக்க வேண்டும் என்று டெல்லி சோனியா வட்டாரமும், தமிழக போலி கதர்ச் சட்டை 'கனபாடிகளும்' கூப்பாடு போடுகிறார்கள். கலைஞர் கருணாநிதியின் தி.மு.க. ஆட்சி அதற்கு தண்டனிட்டு பணிந்து போய் கிடக்கிறது. சொல்லப்படும் காரணம் என்ன? ராஜீவ் கொலைசெய்யப்பட்டார் என்பதுதான்!*

*ராஜீவ் கொலை 1991 ஆம் ஆண்டு நடந்தது. 20 ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ராஜீவ் ஈழத்துக்கு அனுப்பி வைத்த இந்திய ராணுவம், அங்கே பல்லாயிரக்கணக்கான தமிழர்களை படுகொலை செய்து, தமிழ்ப் பெண்களையும் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியது. ராஜீவ் அனுப்பிய ராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்களும் ராஜீவ் உயிரைப் போல் முக்கியமானதுதான். ராஜீவ் மரணத்துக்குப் பிறகு அவரது மனைவி சோனியா, இந்தியாவின் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டார். ராஜீவின் மகனை அடுத்த பிரதமர் பதவிக்கு தயார் செய்து வருகிறார். ராஜீவ் கால காங்கிரசில்கூட அவருக்கு கட்சிக்குள் எதிர்ப்பு அணிகள் இருந்தது உண்டு. சோனியாவோ ராஜீவையும் மிஞ்சி தனது கட்சியை முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டார். அமைச்சரவை முடிவுகள் ஏதுமின்றியே தன்னிச்சையாக தனது ஆணைக்குட்பட்ட 'மலையாள அதிகாரக் கும்பல்' ஒன்றை அமைத்துக் கொண்டு, அதன் வழியாக ஈழத்தில் இனப் படுகொலைகளுக்கு திட்டம் தீட்டித் தந்து ஒரு விடுதலைப் போராட்டத்தையே சீரழித்து விட்டார். கேட்டால் ராஜீவ் கொலை செய்யப்பட்டாரே என்று கூறுகிறார்கள்.*

*ஆனால், இதே காங்கிரஸ் ஆட்சியில், போபாலில் என்ன நடந்தது? யூனியன் கார்பைடு என்ற அமெரிக்க நிறுவனத்தின் ரசாயன தொழிற்சாலையிலிருந்து வெளியேறிய விஷவாயுவால் பல்லாயிரம் மக்கள் பிணமானார்களே; லட்சக்கணக்கான மக்கள் உடல் ஊனமானார்களே; அவர்களின் கதி என்ன? ராஜீவ் உயிருக்காக மட்டும் குடம் குடமாக 20 ஆண்டுகளாக கண்ணீர் வடிக்கும் காங்கிரஸ் கட்சி, பாதிக்கப்பட்ட அந்த ஏழை எளிய மக்களுக்கு, 25 ஆண்டுகாலத்துக்குப் பிறகாவது நிவாரண உதவிகளைப் பெற்றுத் தந்ததா? ராஜீவ் உயிர் மட்டும்தான் உயிரா? மற்ற மனித உயிர்கள் எல்லாம் இவர்களுக்கு மயிருக்குச் சமமா?*

*நாம் இப்போது, இதை எழுதுவதற்கு காரணம் இருக்கிறது. கடந்த ஏப்ரல் 25 ஆம் தேதி, போபால் விஷவாயுவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் கோரி, டெல்லியில் ஜந்தர் மந்தர் பகுதியில் பாதிக்கப்பட்ட போபால் மக்கள் கூடினார்கள். போபாலிலிருந்து நியாயம் கேட்டு டெல்லிக்குப் புறப்பட்டு வந்த இந்த மக்களை ஜந்தர் மந்தர் பகுதியில் சில மணி நேரம் மட்டுமே கூடுவதற்கு, டெல்லி போலீசார் அனுமதித்தனர். ஏப். 15 ஆம் தேதி முதல் தொடர்ந்து ஜந்தர் மந்தர் பகுதியில் போராட்டம் நடத்திடும் உறுதியோடு, மக்கள் அங்கே கூடினர். (அது போராட்டம் நடத்துவதற்காக எப்போதும் அனுமதிக்கப்பட்டுவரும் பகுதி தான்) டெல்லி போலீசாரோ, பிற்பகல் 4 மணிக்குள் டெல்லியை விட்டே வெளியேறிட வேண்டும்; கூடாரங்கள் அமைத்தால் கிழித்து எறிந்து விடுவோம் என்று, மிரட்டி, ஆடுமாடுகளைப் போல் அந்த மக்களைத் துரத்தி அடித்துள்ளனர். காரணம் என்ன கூறப்பட்டது என்றால், டெல்லியில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற இருப்பதால் தொடர் போராட்டத்துக்கு அனுமதிக்க முடியாதாம்!*

*உள்நாட்டு மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலைகளுக்கு நிவாரணம் வழங்குவதைவிட, காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் தான் அவர்களுக்கான முக்கியப் பிரச்சினையாக இருக்கிறது. அலைக்கழிக்கப்படும் இந்த அப்பாவிகளின் சோகக் கதையைப் பாருங்கள்!*

- *25 ஆண்டுகளுக்கு முன்பு போபாலில் விஷவாயுக் கசிவு ஏற்பட்டதால் பலியான மக்கள் 8 ஆயிரம் பேர்; உடல் ஊனமுற்றவர்கள் 5 லட்சம் பேர்; இந்த படுபாதகத்துக்குக் காரணம் - யூனியன் கார்பைடு என்ற அமெரிக்க நிறுவனம். அதன் அலட்சியத்தால் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் நடத்திய ஆபத்து நிறைந்த தொழிற்சாலையில் நடந்த கோளாறால் விஷவாயு வெளியேறி, இத்தனை ஆயிரம் மக்களை பிணமாக்கியது. முதன்மையான குற்றவாளியான அந்த நிறுவனத்தை அதன் தலைவராக இருந்த இராபர்ட் ஆன்டர்சன் என்ற நபரை விசாரணைக்கு உட்படுத்தும் எந்த முயற்சியையும் இந்த ஆட்சி எடுக்கவில்லை. இறந்து போனது 8000 போபால் அப்பாவிகள் தானே ! 'ராஜீவ் காந்தி' உயிராக இருந்திருந்தால் இப்படி அலட்சியப்படுத்தியிருக்க மாட்டார்கள் தானே!*
- *போபால் விஷ வாயுவால் பாதிக்கப்பட்டு, உயிர் பிழைத்து, உபாதைகளுடன் வாழ்க்கைப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் 55 பேர் - 2006 ஆம் ஆண்டில் போபாலிலிருந்து டெல்லி வரை நடைப்பயணம் ஒன்றை மேற்கொண்டனர். 800 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று, பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து, தங்களது அவலத்தை நேரில் விளக்கினர். தங்களுக்கு உரிய நிவாரணம் தராமல், விசாரணைக்கும் வராமல் இருக்கும் அமெரிக்க நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரங்கள் நிறைந்த ஒரு ஆணையத்தை (EMPOWERED COMMISSION) அமைக்க வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கை. அதற்கு மன்மோகன் சிங் தயாராக இல்லை. கண் துடைப்புக்காக அரசு அதிகாரிகள், பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட 'அதிகாரம்' இல்லாத ஒருங்கிணைப்புக் குழு ஒன்றை நியமித்தார். அந்தக் குழுவும் சில பரிந்துரைகளை, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை அரசுக்கு பரிந்துரைத்தது. ஆனால் ஒரு பரிந்துரையைக்கூட இதுவரை சோனியா, மன்மோகன் ஆட்சி செயல்படுத்த முன்வரவில்லை. 8000 பேர் உயிரும் ராஜீவ் உயிருக்கு இணையாகி விடாதே! போபாலில் போன உயிர் ராஜீவ் காந்தி உயிர் அல்லவே!*

**ராஜீவ்காந்தி உயிரைப் பற்றி மட்டும் தானா உங்களுக்கு கவலை? ராஜீவ்காந்தி மட்டும்தானா இந்தத் தேசம்?**

- *விடிவு கிடைக்கும் என்று எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாந்து போன மக்கள் மீண்டும் 2008 ஆம் ஆண்டு அதே போல் 800 கிலோ மீட்டர் நடைபயணமாக டெல்லிக்கு வந்தனர். அப்போது பிரதமரை சந்திக்கவில்லை. அதிகாரம் கொண்ட ஆணையம் ஒன்றை அமைத்து, தங்களின் வாழ்க்கையைக் காப்பாற்றித் தருமாறு மன்றாடினர். டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியின் நடைப் பாதையிலேயே (பிளாட்பாரங்களில்) ஆண்களும், பெண்களுமாக முகாமிட்டனர். கொளுத்தும் வெய்யிலிம் கொட்டும் மழையிலும் அவர்கள் நடைபாதைகளிலேயே நடத்திய போராட்டம் நீடித்த காலம் - ஒன்று, இரண்டு நாட்கள் அல்ல. 5 மாதங்கள், அங்கேயே இருந்து போராடினார்கள். "பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய மருத்துவ பாதுகாப்பு வேண்டும்; குடும்பத் தலைவர்களை விபத்தில் பறிகொடுத்த குடும்பத்தினருக்கு, மறு வாழ்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்பதுதான் அவர்களின் கோரிக்கை.*
- *5 மாதம் தொடர்ந்து போராடிய பிறகே 2008 ஆம் ஆண்டு மே 29 ஆம் தேதி பிரதமர் அலுவலகத்தின், இணை அமைச்சரான பிரித்திவ்ராஜ் சவான், அந்த மக்களை சந்திக்க வந்தார். அவர்களின் கோரிக்கைகளை 'கொள்கை அளவில்' ஏற்றுக் கொள்வதாக உறுதி கூறினார்.*
- *அதற்கு 3 மாதங்களுக்குப் பிறகு, மத்திய ரசாயணம் மற்றும் உரத் தொழல் துறை அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான் அதே 2008 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் தேதி, 'அதிகாரம் நிறைந்த ஆணையம்' ஒன்றை அமைப்பதற்கான வரைவு நகலை, தமது அமைச்சகம் தயாரிக்கும் என்றும், அது பிற துறைகளின் கருத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அறிவித்தார். அறிவிப்போடு அதுவும் நின்று போனது.*
- *விஷவாயுவால் பாதிக்கப்பட்ட 10000 பேருக்கு அரசு புனர்வாழ்வு மய்யங்களில், வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் என்று, இந்திய அரசு தந்த உறுதி மொழியும் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. ஒருவருக்குக்கூட வேலை வழங்கப்படவில்லை.*
- *விஷ வாயு பாதிப்பால் போபால் நிலத்தடி நீர் குடிப்பதற்கு தகுதியில்லாமல் கெட்டுப் போனது. இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் சில தொண்டு நிறுவனங்கள் வழக்கு தொடர்ந்தன. 2004 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் பாதிக்கப்பட்ட போபால் பகுதியில் சுத்தமான குடிநீர் கிடைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று உத்தர விட்டது. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அப்பகுதியில் வாழும் 20000 மக்களும் இன்று வரை அந்தக் கெட்டுப் போன குடிநீரையே பயன்படுத்தும் நிலக்குத் தள்ளப்பட்டுள்ளனர். விஷவாயுவால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகிறதா என்பதைக் கண்டறிய அதே வழக்கில், உச்சநீதி மன்றம் கண்காணிப்புக் குழு ஒன்றை நியமித்தது. அந்தக் குழு போபால் மருத்துவமனையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சிகிச்சையைக் கண்காணித்து, 6 முறை அறிக்கைகளை உச்சநீதி மன்றத்துக்கு அனுப்பியது. மருத்துவ சிகிச்சை என்பது பெயரளவில்தான். பாதிக்கப்பட்டவர்கள் அவமானகரமான நிலைக்கு புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை பாதிக்கப்பட்டவர்களுக்கான தனித் தனி விவரங்களோடு அந்த அறிக்கை விரிவாக விளக்கியது. எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் 7வது அறிக்கையாக "ஒரு பரிந்துரையையும் இதுவரை ஆட்சி செயல்படுத்தவில்லை. எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை, உச்சநீதி மன்றம் எங்களுக்குத் தர வேண்டும். இல்லை என்றால், குழுவையே கலைத்து விடலாம்" என்று உச்சநீதிமன்றத்துக்கு எழுதியது.*
- *உயிர் பிழைத்து நோய்க்கும், ஊனத்துக்கும் உள்ளாகி யுள்ள போபால் மக்கள், அரசின் உறுதி மொழிகளை நிறைவேற்றக்கோரி, அமைதி வழியில் நடத்தி வரும் போராட்டங்களை ஆட்சியாளர்கள் ஒடுக்குகிறார்கள். அவர்களை கைது செயது, சிறையில் அடைக்கிறார்கள். டில்லி திகார் சிறைக்குள் மூர்க்கத்தனமாகத் தாக்கப்படுகிறார்கள்.*

*மீண்டும் டெல்லிக்கு வந்த போபால் மக்கள் - இப்போது 'காமன் வெல்த்' விளையாட்டைக் காரணம் கூறி, விரட்டப்பட்டுள்ளனர். ஒரே ஊரில் 8000 மக்களை பலி கொடுத்துவிட்டு, 5 லட்சம் மக்கள் உடல் ஊனமுற்று, பல்லாயிரக்கணக்கான மக்கள் விஷவாயுக் கசிவால் கடும் நோய்க்கு உள்ளாகி தவிக்கும், ஒரு வாழ்வுரிமைப் பிரச்சினையில் 25 ஆண்டு காலம், அலட்சியப்படுத்தி, அமெரிக்கக் கம்பெனிக்காரனிடம் விசுவாசம் காட்டி நிற்கும், இந்தப் பார்ப்பன ஆட்சியையும், அதன் எடுபிடிகளையும் கேட்கிறோம்; ராஜீவ்காந்தி உயிரைப் பற்றி மட்டும் தானா உங்களுக்கு கவலை? ராஜீங்காந்தி மட்டும்தானா இந்தத் தேசம்?*

*25 ஆண்டுகளாக உயிர் வார்க்கைக்குப் போராடும் இந்த மக்களின் அவலங்கள், இந்த 'டெல்லி சுல்தான்களின் காதுகளில் விழவில்லையா?*

●

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ஏழுமலையானும் சு.சாமியும்

அன்றாட செய்திகளில் இடம்பெறுகிற 'நட்சத்திரங்களில்' ஒருவன் திருப்பதி ஏழுமலையான்! பன்னாட்டு நிறுவனங்கள் நடத்தும் தொழில் லாபங்களுக்கு இணையாக பணம் கொழிக்கச் செய்கிறான் "அவன்". ஏழுமலையான் உண்டியலில் கணக்கில் வராத கருப்புப் பணம் விழுவது வாடிக்கையானதுதான். ஆனாலும் அண்மையில் 'கள்ளநோட்டுகளே' உண்டியலில் கிடந்தது கண்டறியப்பட்டது.

ஏழுமலையான் உண்டியலில் கள்ள நோட்டைப் போட்டாலும் சரி; அல்லது பிக்பாக்கெட்காரன் தொழிலுக்குப் பயன்படுத்திய 'பிளேடைப்' போட்டாலும் சரி; தொழிற் கொலைக்காரன் தனது வெட்டரிவாளைப் போட்டாலும் சரி; உண்டியலில் எது வீழ்ந்தாலும் ஏற்றுக் கொள்வான். ஏழுமலையானுக்கு தங்களைத் தடுக்கும் சக்தி இல்லை என்பது நன்றாகத் தெரிந்ததால்தான், 'சமூக விரோதிகள்' கூட ஏழுமலையான் உண்டியலில் காணிக்கை செலுத்த முண்டியடித்து முன் வருகிறார்கள்.

அய்.பி.எல். சூதாட்டக் கிரிக்கெட் அணியில் பணம் கட்டி ஏலம் எடுத்த ஒவ்வொருவரும் அண்மையில் ஏழுமலையான் உண்டியலில் காணிக்கை செலுத்தி, தங்களது அணிதான் வெற்றி பெறவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்களாம். எல்லா காணிக்கைகளையும் ஏழுமலையான் ஏற்றுக் கொண்டான். இதில் தொழிலதிபர் அம்பானியும், தமது அணிக்காக காணிக்கை செலுத்தி, விசேட தரிசனமும் செய்திருக்கிறார். ஏழுமலையான் கோயிலின் பார்ப்பன தலைமை அர்ச்சகர், அம்பானிக்காக சிறப்பு வழிபாடு நடத்தியுள்ளார், "பிரசாதத்தை" நட்சத்திர ஓட்டலில் தங்கியிருந்த அம்பானியிடம் நேரில் போய் சமர்ப்பித்திருக்கிறார். கோயிலில் கர்ப்பகிரகத்துக்கு வெளியே நின்று 'பிரசாதம்' வழங்குவதுதான் மரபு. ஆனால், அம்பானி இந்தியாவின் மிகப் பெரும் தொழிலதிபர் அல்லவா? எனவே அவர் இருக்கும் நட்சத்திர ஓட்டலுக்கு தலைமை பார்ப்பன அர்ச்சகரே, பிரசாதத்தை எடுத்துக் கொண்டு, காரில் பறந்திருக்கிறார். ஆக, தலைமை அர்ச்சகரின் ஆதரவு அம்பானி வாங்கியுள்ள கிரிக்கெட் அணிக்குத்தான் என்றே தெரிகிறது. அம்பானி அர்ச்சகருக்கு கவனித்த தொகையின் அளவு அவ்வளவு மட்டும் அதிகமாக இருந்திருக்க வேண்டும். தலைமைப் பார்ப்பன அர்ச்சகர், அவர் அம்பானியைத் தேடிப் போனாரா, அல்லது தமது வேத மந்திரத்துக்கு கட்டுப்பட்டுள்ள ஏழுமலையான்-சக்தியையும் உடம்பில் ஏற்றிக் கொண்டு போனாரா என்பது நமக்குத் தெரியாது.

ஆனால், திருப்பதி தேவஸ்தானத்தின் நிர்வாகக் குழு, பார்ப்பன தலைமை அர்ச்சகரின் சிண்டைப் பிடித்துக் விட்டது. (அர்ச்சகர் சட்டைப் போடுவதில்லை என்பதால், சட்டைக்கு பதிலாக, சிண்டைப் பிடித்ததாக கருத்தில் கொள்க.) கோயிலுக்குள்ளே வழங்க வேண்டிய 'பிரசாதத்தை' ஓட்டலுக்குக் கொண்டு போனது குற்றம்; உங்களை ஏன், பதவி நீக்கம் செய்யக் கூடாது என்று கோயில் நிர்வாகக் குழு 'நோட்டீஸ்' விடுத்துள்ளதாம். இதற்கெல்லாம் 'அவர்கள்' கவலைப்படுவார்களா, என்ன? "அம்பானி வேண்டுமா? ஏழுமலையான் வேண்டுமா?" என்று கேட்டால், அவாள்கள், அம்பானியின் பக்கம் நிற்பார்களே தவிர, 'ஆண்டவன்' பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டார்கள். ஆண்டவன் வருமானத்தைவிட, அம்பானி தரும் பணம் பல மடங்கு அதிகமாக இருக்குமே!

ஏழுமலையானுக்கு வைரத்தால், தங்கத்தால் கால் செருப்புகூட செய்துப் போட்டுப் பார்த்துவிட்டார்கள். இனி அவனது 'அங்கத்தில்' தங்கத்தையும், வைரத்தையும் ஏற்றுவதற்கு இடமில்லை என்பதால், கர்ப்பகிரகத்தையே தங்கமுலாம் பூச நிர்வாகம் முடிவு செய்தது. வறுமைக்கோட்டுக்குக் கீழே பகுதிப் பேர் வாழும் இந்தியத் திருநாட்டின் வறுமையை ஒழித்து, மக்களை வளமாக்க வேண்டுமானால் இப்படியெல்லாம் தங்கத்தால் இழைக்க வேண்டும்! ஏழைமலையானுக்கு 'கக்கூஸ்' இருந்தால்கூட அதையும் தங்கத்தால் இழைக்க வேண்டும் என்று பார்ப்பனர்களும் ஆன்மீகக் கொழுந்துகளும் கூறுவார்கள்.

'நைவேத்தியம்' என்ற பெயரில் ஆண்டவனுக்கு உணவுப் பொருளைப் படைக்கும்போது கழிவறை மட்டும் ஏன் கட்டுவதில்லை என்பதுதான் நமக்கும் புரியாத கேள்வி? நல்லவேளை! ஆகமங்கள் கழிவறை கட்டுவது பற்றி ஏதும் கூறாமலே விட்டுவிட்டன! அப்படி கூறியிருந்தால் ஏழுமலையான் காலையிலும் மாலையிலும் கழிப்பறைப் போவதாகக் கூறி, அங்கும் ஒரு கர்ப்பகிரகம் கட்டி, "மணம் கமழும் பிரசாதங்களை" தயாரித்து அதற்கும் டிக்கட் போட்டு, கட்டணம் வாங்கி விடுவார்கள். 'வயிற்றுக் கோளாறுக்காரர்கள்' அங்கேயும் போய் கியூவில் நின்று, சிறப்பு தரிசனத்துக்குக் காத்திருப்பார்கள். இது 'புண்ணியபூமி' யல்லவா?

இதையெல்லாம் நாம் எழுதினால், 'கடவுளை கிண்டல் செய்கிறான் பார், குறும்புக்காரன்' என்று, சண்டைக்கு வந்துவிடுவார்கள். நமக்கு ஏன், இந்த வம்பு?

ஆனால், கோயில் நிர்வாகம் கருவறைக்குள் தங்க முலாம் பூசுவதே, ஆகமத்துக்கு விரோதமாம்! பக்தர் ஒருவர், ஆந்திர உயர்நீதிமன்றத்தில் இதை எதிர்த்து வழக்குத் தொடர, ஆந்திர உயர்நீதிமன்றமும், தங்கமுலாம் பூசும் திட்டத்துக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது.

"தங்க முலாம் பூசுவது ஆந்திர மாநில அறநிலையத் துறை சட்டத்துக்கு எதிரானது; ஆகமத்துக்கு எதிரானது; அர்ச்சகர்களைக் கலந்து ஆலோசிக்காமலே இத்திட்டத்தைத் தொடங்கியது குற்றம். எல்லாவற்றையும்விட 1958 ஆம் ஆண்டின் தொல் பொருள் பாதுகாப்புச் சட்டத்துக்கே எதிரானது" என்று வழக்கு தொடர்ந்த பக்தர் கூறுகிறார்.

ஏழுமலையான் கருவறை தொல்பொருள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் வரும் என்றால், பிறகு ஏழுமலையான் இருக்க வேண்டிய இடம் தொல்பொருள் பாதுகாப்பகமே தவிர கோயில் அல்லவே என்று நாம் கேட்டால், பக்தர்கள், பார்ப்பனர்களுக்கு மூக்கு மேல் கோபம் பொத்துக் கொண்டு வரும்!

தங்க முலாம் பூசுவதற்கு இடைக்கால தடை விதித்த நீதிபதிகள்கூட, கோயில் நிர்வாகம் வழிபாட்டு முறைகளில் எல்லை மீறி தலையிடுவதாக புலம்பியிருக் கிறார்கள்! கடவுளுக்கு ஒவ்வொரு நாளும் மஞ்சள் நீராட்டை ஏன் நடத்திக் கொண்டிருக்க வேண்டும்? இது வீண் செலவு தானே? என்று கோயில் சிலைக்கே மஞ்சள் வண்ணத்தை எங்கோ ஒரு கோயிலில் அடித்துவிட்டார்களாம். இதையும் நீதிபதிகளே சுட்டிக்காட்டி, கவலையோடு கசிந்துருகியிருக்கிறார்கள். நியாயம் தான்! கோயில் நடைமுறைகளில் நீதிமன்றங்கள் வழியாக தங்களைப் போன்ற நீதிபதிகள் தலையிடலாமே தவிர, கோயில் நிர்வாகம் தலையிடுவது தவறு தானே?

ஆக, ஏழுமலையான் என்றாலும், எட்டுமலையான் என்றாலும், சைபர் மலையான் என்றாலும், 'ஆண்டவன்' என்று வந்துவிட்டால், அதில் அர்ச்சகப் பார்ப்பான், ஆகமம் தவிர வேறு எவரும் தலையிடவே கூடாது என்று தான் பார்ப் பனர்களும், பக்தர்களும் அடித்துக் கூறுகிறார்கள். நீதிமன்றமும் அதையே வழி மொழிந்தது. சுப்பிரமணியசாமியும்கூட இந்தக் கட்சி தான். அவர்கூட திருப்பதி தங்க முலாம் பூச்சுக்கு எதிராக, நீதிமன்றம் போகப் போவதாகக் கூறுகிறார். காஞ்சிபுரம் தேவநாதன்கூட, இதில் சுப்ரமணியசாமியின் கட்சிதான்! கருவறையில் ஆகமும், அர்ச்சகரும் தவிர வேறு எந்த சக்திக்கும் தலையிடும் உரிமை இல்லை என்கிற போது கருவறைக்குள் 'கிருஷ்ணன் விளையாட்டை' நடத்திப் பார்த்த தேவ நாதனைக் கைது செய்வது, ஆண்டவனுக்கே, விரோதமான அரசின் தலையீடு தானே? சுப்ர மணியசாமி, 'தங்கமுலாம்' வழக்கோடு தேவநாதனுக்கு ஆதரவாகவும் ஒரு வழக்கை தொடரலாம் என்பது அடியேனின் தாழ்மையான விண்ணப்பம். இதைப் போன்ற நியாயமான உரிமைகளுக்கெல்லாம் துணிவோடு போராடக் கூடிய **மான ஈனமற்ற ஒரு மனித பிறவி** சுசாமியை விட்டால் வேறு எவன் கிடைப்பான்? நீங்களே தான் சொல்லுங்களேன்!

**– கோடங்குடி மாரிமுத்து**

## வந்த கடிதம்

8.4.2010 புரட்சிப் பெரியார் முழக்கம் இதழில் ஆபத்து என்ற கட்டுரையில் உலகைப் படைத்தது கடவுள் இல்லை என்பதையும், தானாகவே பெரு வெடிப்புக் காரண மாக உலகம், உயிர்கள் தோன்றி யதையும் சுட்டிக்காட்டி, புதுக் கவிதை நடையில் சிவனடியாரையும், பெருமானையும், சங்கராச்சாரிகளை யும், போப்புகளையும், முல்லாக் களையும் ஒரு பிடி பிடித்துள்ளீர்கள்.

**தஞ்சை வடசேரி**
**க.சொ. சிவசுப்பிரமணியன்**

'அ.மார்க்ஸ் பேச்சுக்கு எதிர்ப்பு கூட்டம் பாதியில் முடிந்தது' என்னும் தலைப்பிலான செய்தியைப் படித்தேன். தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் விடுதலைப் புலிகளையும் கொச்சைப் படுத்தி தொடர்ந்து தோழர் அ.மார்க்ஸ் பேசி வருவது மிகுந்த வருத்தத்தையும், அதிர்ச்சியையும் தந்தது. 1996ஆம் ஆண்டு முஸ்லீம்களை விடுதலைப் புலிகள் கொன்றார்கள் என்ற குற்றச் சாட்டையே மய்யமாக வைத்து அவர் பேசியதும், கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழர்கள் விடுதலைப்புலிகளை ஆதரிக்க வில்லை என்றும் விடுதலைப்புலிகள் செய்த தவறு களினாலேயே தமிழர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளானார்கள் என்றும் அவர் பேசியது துரோகச் செயலாகும்.

**– தங்க. சங்கரபாண்டியன், மணலிபுதுநகர்**

## கோ.கேசவன் – ஜாக்குலின் 25 ஆம் ஆண்டு மண விழா

கழகச் செயல்வீரரும், பெரியார் திராவிடர் கழகத்தின் முன்னோடியுமான சென்னை கோ.கேசவன் - ஜாக்குலின் இணையரின் மணவிழாவின் 25 ஆம் ஆண்டு - மே 6 ஆம் நாள்! அதன் நினைவாக கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கியுள்ளனர். மண மக்களை 'புரட்சிப் பெரியார் முழக்கம்' அவர்கள் மேற் கொண்டுள்ள கொள்கை வாழ்க்கை மேலும் தொடர வாழ்த்துகிறது!

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
தொடர்புக்கு புதிய எண்:
✆ 90030 87605

## ராசிகளுக்கு தபால்தலையா? சங்கராபுரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்





17.4.2010 சனிக்கிழமை மாலை 4 மணியளவில் விழுப்புரம் மாவட்ட கழக சார்பில் 12 ராசிகளின் பெயரில் தபால் தலை வெளியிடும் தபால்துறை மற்றும் மத்திய அரசை கண்டித்து சங்கராபுரம் பேருந்து நிலையம்அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு ச.க.இளையராசா தலைமை தாங்கினார். ச. பெரியார் வெங்கட், மாவட்ட தலைவர் ப.கண்ணன், மாவட்ட செயலாளர் மு.வ.நடராசன், ந. அய்யனார் ஆகியோர் கண்டனவுரை நிகழ்த்தினர். சி.சாமிதுரை, மு.வ. செல்வராசு, மா.குமார், துரை. பாண்டியன், க. கோவிந்தன் உள்பட தோழர்கள் பலரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 6th May 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2041 | மே 13, 2010 | புரட்சி 9 | முழக்கம் 18 | விலை: ரூ.2.50


# சாதி தீண்டாமைக்கு எதிராக கழகத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகள்

*சாதி தீண்டாமைக்கு எதிரான கருத்துகளை முன் வைத்து ஏப்.14 ஆம் தேதி போடியில் தொடங்கிய கழகத்தின் பரப்புரைப் பயணம் மே 10 ஆம் தேதி புதுவையில் நிறைவடைந்தது. நிறைவு விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பயணத்தின் தொடர்ச்சியாக கழகத்தின் அடுத்த கட்ட செயல்பாடுகளை அறிவித்தார்.*



- *தமிழகம் முழுதும் கிராமங்களில் தீண்டாமை பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கும் அமைப்புகள், கடைகள் பற்றிய பட்டியலை கழகத் தோழர்கள் தயாரிப்பார்கள்.*
- *அந்தத் தீண்டாமைகளை அகற்றக் கோரும் பரப்புரைப் பயணம் இரண்டாவது கட்டமாக கழக சார்பில் நடத்தப்படும்.*
- *மற்றொரு நடவடிக்கையாக சட்டத்துக்கு எதிராக பின்பற்றப்பட்டுவரும் இந்தத் தீண்டாமைக்கு எதிரான பொது நலன் வழக்குகள் தீண்டாமையைத் தடுக்கத் தவறிய அமைப்புகள், அதிகாரிகள் மீது கழக சார்பில் வழக்குகள் தொடரப்படும்.*
- *தமிழ்நாட்டில் மய்யப் பகுதியான திருச்சியில் கிறித்தவர் களுக்கான கல்லறையில் 'தீண்டப்படாத' மக்களுக்காக குறுக்குச் சுவர் எழுப்பி தனிக் கல்லறை இருந்து வருவதை அரசின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்து வருகிறது. இந்தியாவின் 'சுதந்திர நாள்' என்று கூறப்படும் ஆக. 15-க்குள் இந்தத் 'தீண்டாமை'யைத் தடுக்கும் சுவரை இடிக்கா விட்டால், திருச்சி தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அலுவலகத்தை இழுத்து மூடும் போராட்டத்தை கழகம் நடத்தும்.*

*- என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி பலத்த கரவொலிகளுக்கிடையே அறிவித்தார்.*

*இந்தப் போராட்டங்களில் கட்சிகளைக் கடந்து, இந்த கோரிக்கையின் நியாயத்தை ஏற்போர் பங்கேற்க முன் வரவேண்டும்.*

*பங்கேற்க இயலாதவர்கள், தங்களது ஆதரவை வழங்க வேண்டும். அல்லது குறைந்தபட்சமாக சந்திக்கும் தோழர் களிடம் இது பற்றி எடுத்துக் கூறி, இந்தப் போராட்டத்துக்கு ஆதரவான கருத்துகளை உருவாக்குவதிலாவது தங்களது பங்களிப்பை வழங்க வேண்டும் என்று கழகத் தலைவர் கேட்டுக் கொண்டார்.*

**– நமது செய்தியாளர்**

# கொலைகாரநாட்டுக்குழை உலகேவையா?




2010 ஆம் ஆண்டுக்கான இந்திய திரைப்படங் களுக்கான சர்வதேச விருது வழங்கும் விழாவை ஜூன் 3, 4, 5 தேதிகளில் இனப் படுகொலை தலைநகரான கொழும்பில் நடத்துவதற்கு இந்தி திரைப்படத் துறையினர் திட்டமிட்டுள்ளனர். இந்த நிகழ்வுக்கு விழாக் குழுவின் விளம்பரத் தூதுவராக நடிகர் அமிதாப்பச்சான் பொறுப்பேற்றுள்ளார். அண்மையில் இந்த விழா பற்றிய ஏற்பாடுகளுக்காக இனப் படுகொலையாளன் இராஜபக்சேயின் விருந்தினராக கொழும்புச் சென்று அங்கே அதிபர் மாளிகையில் சிறப்பு விருந்தினராகத் தங்கியுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் இந்த விருது வழங்கும் விழாக்கள் நடத்தப்படுகின்றன. விழா நடைபெறும் நாட்டை இந்தியாவின் வெளியுறவுத் துறையினர் இந்தியாவின் சர்வதேச உறவுகளை முன் வைத்து முடிவெடுக்கிறார்கள். இதன்படி இவ்வாண்டு இந்த விழாவை முதலில் தென்கொரியா நாட்டில் நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் தென் கொரிய அதிபரின் பிரதிநிதி இந்தியா வந்திருந்தபோது இந்த முடிவு எடுக்கப் பட்டது. கடைசி நேரத்தில் இந்திய ஆட்சியின் உயர் மட்டத்தில் இந்த விழாவை கொழும்பு நகரில் நடத்த முடிவு செய்தனர். இலங்கையில் இராஜ பக்சே தமிழர் போராட்டத்தை ஒடுக்கி, அமைதி தவழும் ஆட்சியை நடத்துவதாக உலக நாடுகளை நம்பச் செய்வதற்கும், இராஜபக்சே போர்க் குற்றவாளியே என்ற குற்றச்சாட்டு உலகநாடுகளில் வலிமையடைந்து வருவதை திசை திருப்புவதற்கும் இந்தியாவின் ஆட்சியாளர்கள், இப்படி ஒரு முடிவை எடுத்துள்ளனர்.

தமிழர்களின் தாயகப் பகுதியான வடக்கு, கிழக்கு மாநிலங்களில் "அபிவிருத்தி திட்டங்களை" நிறைவேற்றுவதற்கான வர்த்தகத்துக்கு இந்தியாவின் பெரும் தொழில் நிறுவனங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. இதற்கான வாய்ப்புக் கதவுகளைத் திறந்து விடுவதற்கும், இந்த சதித் திட்டம் அரங்கேறவுள்ளது.

- அயர்லாந்து நாட்டின் தலைநகரான டப்ளினில் மக்கள் நிரந்தரத் தீர்ப்பாயம் இலங்கை அரசின்

(4 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

# சாதிவாரி கணக்கெடுப்பு அவசியம் – ஏன்?

2011–க்கான பத்தாண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அடுத்த மாதத்தில் நம் தமிழ்நாட்டில் தொடங்க இருக்கின்றன. இக் கணக்கெடுப்பில் சாதிவாரி கணக் கெடுப்பு எடுக்கப்பட வேண்டும் என்ற குரல் இந்திய ஒன்றியம் முழுதும் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. நாடாளுமன்றத்திலும் சூடான விவாதம் நடந்து வருகின்றது.

பெரியார் திராவிடர் கழகமும் மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் 27 சதவீதம் இடஒதுக்கீடு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி தமிழ்நாட்டின் மூன்று பகுதிகளிலிருந்து புறப்பட்ட பரப்புரை குழுக்கள் பத்து நாட்கள் பயணம் செய்து, 2007 அன்று திருச்சியில் நடத்திய கழக மாநாட்டில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றினோம். ஏன் இந்த கோரிக்கை? ஏன் இவ்வளவு வலிமையாக எழுப்பப்படுகிறது?

இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரை ஒரு மனிதனின் வாழ்விடம், தொழில், உடை, திருமணம், கல்வி, சமூக அந்தஸ்து அனைத்துமே அவரவர் பிறந்த வழியே தீர்மானிக்கிறது. பெரும்பான்மை மக்களின் வாக்குகளைக்கொண்டு அமைக்கப்படும் குடிநாயக ஆட்சி, பெரும்பான்மை மக்களின் கல்வி, தொழில், வாழ்வுரிமை பற்றியும் அக்கறை காட்ட வேண்டுமல்லவா? அதுதான் இல்லை. விடுதலை பெற்று, தனி அரசமைப்பு சட்டம் இயற்றி அறுபது ஆண்டுகள் கடந்த நிலையிலும், பெரிய தடைகளையெல்லாம் தாண்டி இந்த ஆண்டுதான் மத்திய அரசின் உயர் கல்வி நிறுவனங்களில் 9 சதவீத இடம், 60, 70 விழுக்காடாய் இருக்கிற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

பிற்படுத்தப்பட்டோருக்கு கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் இடஒதுக்கீடு செய்வது தொடர்பான இந்திரா சகானி (எதிர்) இந்திய ஒன்றியம் (1992); எம். நாகராஜ் (எதிர்) இந்திய ஒன்றியம் (2006); அசோக் தாக்கூர் (எதிர்) இந்திய ஒன்றியம் (2008) போன்ற வழக்குகளில் எல்லாம் எதிர் தரப்பினர் வைத்த முதன்மையான வாதம் என்ன? 1931க்குப் பின்னர் சாதிவாரி கணக்கெடுப்பு எடுக்கப்படவில்லை என்பதை முன்வைத்தே வாதாடினார்கள்.

மேற்கண்ட மூன்று வழக்குகளிலும் ஒட்டு மொத்த மக்களின் சமூக கல்வி நிலை குறித்து முழுமையான கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தொடர்ச்சியாக உச்சநீதிமன்றம் அறிவுறுத்திய பிறகும்கூட, 2011 கணக்கெடுப்பிலும் சாதிவாரி விவரங்களை எடுக்க உரிய வழி வகைகள் ஏதும் செய்யப்படவில்லை.

இந்தியாவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 1892 இல் முதன்முறையாக எடுக்கப்பட்டபோது, அது முழுமையான கணக்கெடுப்பாய் அமையவில்லை. 1881 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில்தான் சாதிவாரி கணக்கெடுப்பு முழுமையாக எடுக்கப்பட்டது. அது 1931 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நடந்தது.

இரண்டாம் உலகப் போர் நடந்து வந்த நிலையில் 1941 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு சரிவர, முழுமையாக எடுக்க முடியவில்லை.

குடியரசான பிறகு இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 1951 இல் நடைபெற்றபோது, சாதிவாரி கணக்கெடுப்பு கைவிடப்பட்டது. ஆனால் அரசியல் சட்டத்தின் 341, 342 ஆவது பிரிவுகளின்படி பட்டியல் இன சாதி, பழங்குடியினர் கணக்கெடுப்பு மட்டும் தொடர்கிறது.

அரசியல் சட்டத்தின் 340 ஆவது பிரிவு சமூகத்திலும் கல்வியிலும் பின் தங்கியுள்ள வகுப்புகளின் நிலையை பற்றியும், அவர்களுக்குள்ள சங்கடங்களைப் பற்றியும், அத்தகைய சங்கடங்களைப் போக்குவதற்கான வழி வகைகள் பற்றியும் அவர்களை மேம்படுத்துவதற்காக மத்திய (அ) மாநில அரசுகள் கடைபிடிக்க வேண்டிய நடவடிக்கைகள் போன்றவற்றை ஆய்வு செய்து அறிக்கை தர ஆணையம் ஒன்று அமைக்கப்பட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூறுகிறது.

அதன் அடிப்படையில் 1953 இல் அமைக்கப்பட்ட காகாகலேல்கர் ஆணையம், 1978 இல் அமைக்கப்பட்ட மண்டல் ஆணையம், பல மாநிலங்களில் அமைக்கப்பட்ட இவையொத்த பிற ஆணையங்கள் எல்லாம் பிற்படுத்தப்பட்ட மக்கள் குறித்த சாதிவாரி கணக்கெடுப்பு செய்ய பரிந்துரைத்தும், அரசு உயர்சாதியினரின் எதிர்ப்பைக் கருதி திட்டமிட்டே புறக்கணித்தும் வந்துள்ளது.

ஆனாலும், இதே மய்ய அரசு தான் பிற்படுத்தப்பட்டோர் குறித்த வழக்குகள் நீதிமன்றத்தில் வருகிறபோதெல்லாம் 1931 முதல் பிற்படுத்தப்பட்டோரின் முறையான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஏதும் இல்லை என்ற பார்ப்பன உயர்சாதியினரின் வாதங்களுக்கு முகம் கொடுத்து பார்ப்பனருக்கு எதிரான வாதங்களை முன் வைத்து வந்துள்ளது.

புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் ''சூத்திரர்கள் யார்?'' (1946) என்ற தமது நூலில்:

''சூத்திரர்களின் பிரச்சினையின் ஆழம் குறித்து மக்கள் சரியாக உணர்ந்திராததற்கு காரணம் சூத்திரர்களின் மக்கள் எண்ணிக்கை குறித்து அவர்கள் அறிந்திராமல் இருப்பதுவே ஆகும். கெட்ட வாய்ப்பாக மக்கள் தொகை கணக்கெடுப்பும் அவர்களின் கணக்கை தனியாக எடுக்கவும் இல்லை. என்றாலும், தாழ்த்தப்பட்டவர்கள் நீங்கலான ''சூத்திரர்'' களின் எண்ணிக்கை இந்து மதத்தைப் பொருத்த வரையிலும் 75 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை'' என்று குறிப்பிட்டுள்ளார்.

மண்டல் குழு அறிக்கை இந்துக்களில் 44 சதவீதப் பேரும், பிற மதங்களில் 8 சதவீத பேரும் என மொத்தம் 52 சதவீத பேர் பிற்படுத்தப்பட்டோர் எனக் கூறுகிறது.

தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு முதலில் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 36 சதவீதம் என்றது. ஆனால், பின்னர் அவர்களே எடுத்த மாதிரிக் கணக்கெடுப்பு 42 சதவீதம் பேர் பிற்படுத்தப்பட்டவர்கள் என்கிறது.

வட்டாரத்துக்கு சில வீடுகள் என எடுத்து கணக்கிடும் மாதிரி கணக்கெடுப்பு துல்லியமானது அல்ல என்றாலும் அதனை ஆதாரமாகக் காட்டி கூக்குரல் எழுப்புகின்றனர்.

அரசியல் சட்டத்தின் 15(4) பிரிவு சமுதாயத்திலும் கல்வியிலும் பின் தங்கியுள்ள பிரிவினருக்கு கல்வி நிலையங்களில் சிறப்பு ஏற்பாடுகள் (இடஒதுக்கீடு) செய்வது குறித்துப் பேசுகிறது. பிற்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை பல்வேறு நிலைகளில் அவர்கள் பெற்றுள்ள கல்வித் தகுதி, மாநில சராசரியோடு அப் பிரி வினரின் சராசரி ஆகியவற்றை ஒப்பிட்டே முடிவு செய்வது பொருத்தமா யிருக்கும்.

அரசு வேலை வாய்ப்புகளில் போதிய பிரதிநிதித்துவம் இல்லாத சாதியினருக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்வது குறித்து அரசியல் சட்டத்தின் 16(4) பிரிவு கூறுகிறது. ஒரு பிரிவினரின் மக்கள் தொகை, அப்பிரிவினரில் அரசு வேலை பெற்றுள்ளோர் எண்ணிக்கை, வேலையின் எந்தப் படி நிலையில் எத்தனை பேர் என்ற விவரம் இல்லாமல் எவ்வாறு அரசு சரியாக செயல்பட முடியும்?

1993 ஆம் ஆண்டின் பிற்படுத்தப்பட்டோருக்கான தேசிய ஆணையச் சட்டத்தின் 11 ஆவது பிரிவின் (1) உட்பிரிவு, ''இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தபின் ஒரு முறையும், அதன்பின் ஒவ்வொரு பத்தாண்டிலும், சமுதாயத்திலும், கல்வியிலும் பின் தங்கியுள்ள நிலையிலிருந்து மீண்டு விட்ட பிரிவினரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலிலிருந்து நீக்கவும், அல்லது புதிதாக சேர்க்கவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்'' என்று கூறுகிறது. இது சாதிவாரியான கணக்கெடுப்பு இல்லாத நிலையில் எவ்வாறு நிறைவேற்ற முடியும்?

நீண்டகாலமாக இடஒதுக்கீட்டு முறை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப் படும். தமிழ்நாடு, கர்நாடகம் போன்ற மாநிலங்களில் பொதுப் போட்டி (Open Competition) இடங்களிலேயே பெரும் பகுதியைப் பெறும் அளவுக்கு பிற்படுத்தப்பட்ட மக்களும், சில இடங்களைப் பெறும் அளவுக்கு தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களும் வளர்ந்துள்ளனர். இதைக் கணக்கில் கொண்டு, இதுவரை ஏறத்தாழ எல்லா இடங்களையுமே மொத்தமாக அனுபவித்து வந்த உயர்சாதிக் கூட்டம், தமக்கு அடுத்த நிலையில் போட்டியாக வளர்ந்து வரும் பிற்படுத்தப்பட்ட மக்களை முடிந்தவரை கல்வி, வேலை வாய்ப்புகளில் வராமல் பார்த்துக் கொள்வதில் மிகவும் எச்சரிக்கையாக செயல்பட்டு வருகின்றன.

கடந்த காலங்களில் அரசின் உயர் பீடங்களில் அமர்ந்துவிட்ட உயர்சாதி அதிகாரிகளின் உதவியோடு தங்கள் ஏகபோக உரிமையையும் முடிந்த வரையிலும் காப்பாற்ற பல்வேறு வஞ்சக நடவடிக்கைகளிலும், பரப்புரைகளிலும் ஈடுபடு கின்றனர். சாதி வாரி கணக்கெடுப்பால் சாதியம் சமூகத்தில் ஆழமாய் வேர் கொண்டுவிடும் என்ற ஒரு பரப்புரையை செய்கின்றனர். ஆனால், இவர்கள், கடந்த 70 ஆண்டுகளாக சாதிவாரி கணக்கெடுப்பில்லாத நிலையிலும் சாதியம் சமூகத்திலும், அரசியலிலும் ஆளுமை செலுத்துவதை ஏனோ கணக்கில் எடுக்கத் தவறுகின்றனர்.

சாதிகளுக்குள் பிளவுகளை சாதிவாரி கணக்கெடுப்பு ஏற்படுத்தும் என்ற வாதமும் மேற்கண்டவாறே ஆதாரமற்றதாகும்.

சாதிவாதி கணக்கெடுப்பால் மக்கள் தொகை அதிகமுள்ளோரின் ஆதிக்கம் சமுதாயத்தில் ஏற்படும் அபாயம் உள்ளது என்றொரு கருத்தையும் உயர்சாதியினர் கூறுகின்றனர். இதுவரை சூழ்ச்சிகளாலும், தந்திரங்களாலும், கல்வி, வேலை வாய்ப்புகளில் முற்றாதிக்கம் செலுத்தி வரும் கூட்டம் மிகச் சிறுபான்மையான பார்ப்பன சாதியே ஆகும்.

மக்கள் தொகை அதிகமுள்ள பிரிவினர் ஆதிக்கம் செலுத்தி விடுவார்கள் என்ற வாதம் உண்மையானால், முற்று முழுதாய் இந்துக்களே வாழ்ந்து வந்த இந்தியாவில், வெளியிலிருந்து வந்த மிகக் குறைவான எண்ணிக்கைக் கொண்ட இஸ்லாமியர் ஆட்சி எவ்வாறு ஏற்பட்டது? அதற்குப் பிறகு முழுதும் இந்துக்களும், இஸ்லாமியர்களுமே இருந்த இந்தியாவில் நூற்றுக்கணக்கில் மட்டுமே நுழைந்த ஐரோப்பியர்கள், குறிப்பாக ஆங்கிலேயர்கள் ஆட்சி எப்படி ஏற்பட்டது?

அரசியல் சட்டத்தின் 15, 16, 29(2) ஆகிய பிரிவுகள் 'தம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம், மரபு வழி, மொழி ஆகிய காரணங்களுக்காக பாகுபாடு காட்டப்படுவது கூடாது என தடை செய்துள்ளது. ஆகவே சாதிவாரியான கணக்கெடுப்பு நடத்துவது சரியல்ல என்று ஒரு சொத்தை வாதம் முன் வைக்கப்படுகிறது. இவ்வாதத்தை வைப்போர் சாதியைத் தவிர பிற கூறுகளான மதம், இனம், பாலினம், பிறப்பிடம், மரபு வழி, மொழி பற்றிய விவரங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பில் பதியப்படுகின்றன என்பதை ஏனோ கவனிக்கத் தவறுகின்றனர். மேலும் பட்டியல் இன வகுப்புகள், பழங்குடிகள் மற்றும் ஆங்கிலோ இந்தியர் போன்றோர் பற்றிய விவரங்களும் தொடர்ச்சியாக பதியப்பட்டே வந்துள்ளன என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

ஆக, ஒவ்வொரு முறை பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் வருகிற போதெல்லாம் 1931க்குப் பின் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை குறித்த கணக்கெடுப்பு இல்லை என்பதையே முதன்மையான வாதமாய் எதிர்தரப்பினர் வைத்து வந்ததையும், ஒரு வேளை ஒரு குறிப்பிட்ட சாதிப் பிரிவினர் பின் தங்கிய நிலையிலிருந்து மீண்டிருந்தாலோ அல்லது குறிப்பிட்ட மக்கள் பிரிவினரின் பின் தங்கிய நிலை கண்டறியப்பட்டாலும், பிற்படுத்தப்பட் டோர் பட்டியலை அதற்குத்தக திருத்தி அமைக்க சாதிவாரிக் கணக்கீடு அவசியமாகிறது.

1991 ஆம் ஆண்டு முதல் மதுலிமாயி போன்ற பல்வேறு மூத்த தலைவர்கள் சாதிவாரிக் கணக்கெடுப்பை வலியுறுத்தி வழக்குகள் தொடுத்து வந்துள்னர்.

இப்போது சாதிவாரிக் கணக்கெடுப்புக்கு விண்ணப்பத்திலேயே எளிய வழி உண்டு. ஏற்கனவே 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு படிவத்தில் குடும்பவாரியான சமூகத் தன்மை பற்றிய பிரிவில் குடும்பத் தலைவர் சார்ந்துள்ள சாதி / சமுதாயம் பற்றிய கேள்வியில் ''பட்டியலின சாதி அல்லது பழங்குடியினர்'' எனில் குறியீட்டெண்ணைப் பதிவு செய்யுமாறு அச்சிடப்பட்டிருந்தது. அதில் ''பட்டியலின சாதி / பழங்குடி / பிற்படுத்தப்பட்டவர்'' என சிறு திருத்தம் செய்தாலே போதும்.

பெரும்பான்மை மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படும் குடிநாயக அரசான இந்திய அரசு, நாட்டு மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினராக உள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனுக்கும், மேம்பாட்டுக்குமான திட்டங்களை தீட்டுவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் வாய்ப்பாகவும்,எழுபது ஆண்டு களாக தவிர்க்கப்பட்டு வந்துள்ள சாதிவாரி கணக்கெடுப்பை மேற்கொள்ளுவதன் வழியாக உரிய சமூகநீதி வழங்க எளிதாக அமையும் என்பதால்தான் பெரியார் திராவிடர் கழகம் சாதி வாரிக் கணக்கெடுப்பை வற்புறுத்துகிறது.

**– தா.செ. மணி, தலைவர், பெரியார் திராவிடர் கழகம்**

## தொய்வின்றி தொடருகிறது, பரப்புரை கூட்டங்கள்

# களப் பணியில் சென்னை தோழர்களின் எழுச்சி!







சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் தொய்வின்றி பம்பரமாய் சுழன்று களப்பணிகளை யாற்றி வருகின்றனர். ஏப்ரல் மாதத்தில் மட்டும் 5 பரப்புரைக் கூட்டங்களை நகரின் பல்வேறு பகுதிகளில் தென்சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் நடத்தியுள்ளது. அனைத்துக் கூட்டங்களிலும் சிற்பி ராசன் மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சிகளை நடத்தினார். கடந்த 9 ஆம் தேதி மயிலாப்பூரிலும், 10 ஆம் தேதி பல்லாவரத்திலும், 11 ஆம் தேதி திருவான்மியூரிலும், 12 ஆம் தேதி இராயப்பேட்டையிலும் தெருமுனைத் தொடர் பரப்புரைக் கூட்டங்கள் அம்பேத்கர் பிறந்தநாளை யொட்டி நடந்தன. கூட்டங்களில் கழகத் தோழர்கள் குமரன், உமாபதி, அன்பு தனசேகர் உரையாற்றினர்.12 ஆம் தேதி இராயப்பேட்டைப் பகுதியில் சாதி ஒழிப்பு வீரர்கள் பெரியார், அம்பேத்கர் நினைவு நூலகம் ஒன்று திறக்கப்பட்டது. நூலகத்தைத் திறந்து வைத்து கழகத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினர்.

தொடர்ந்து ஏப்.14 ஆம் தேதி மயிலாப்பூர் புனித மேரி சாலை அருகே அம்பேத்கர் பிறந்த நாள் பொதுக் கூட்டத்தை மயிலாப்பூர் பகுதி பெரியார் திராவிடர் கழகம் மிகச் சிறப்பாக நடத்தியது. பூர்ணிமா தலைமையில், ஜான், சசி முன்னிலையில் நடந்த கூட்டத்தில், துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், ம.தி.மு.க. வெளியீட்டுச் செயலாளர் வந்தியத் தேவன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அம்பேத்கர், பெரியார், சாதி ஒழிப்புப் போராட்டத்தில் இணைந்து செயல்பட்ட வரலாறுகளை விளக்கி, சிறப்புரையற்றினார். இறுதியில் புதுகை பூபாளம் கலைக் குழுவினரின் புதிய நையாண்டி நிகழ்ச்சி, மிகச் சிறப்பாக ஒன்றரை மணி நேரம் நடந்தது. மக்களை சிரிக்க வைத்து, சமுதாயக் கருத்துகளை சிந்திக்க வைத்த அருமையான நிகழ்ச்சியை பொது மக்கள் ஆர்வத்துடன் கேட்டனர். தோழர் ஜெயந்தி நன்றியுரையுடன், 10 மணியளவில் கூட்டம் நிறைவடைந்தது.

டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் 16.4.2010 வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் வடசென்னை புளியந்தோப்பு பார்த்தசாரதி தெருவில் வடசென்னை மாவட்ட கழகம் சார்பில் நடைபெற்றது. சி. அருள்தாசு தலைமையேற்க, தா.இ.கோவிந்தன் வரவேற்க, க.மு.சுப்ரமணி, ஏ.விஜயன் முன்னிலை வகித்தனர். கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், கழக வழக்கறிஞர் சு. குமாரதேவன், வழக்கறிஞர் ஆ. கவுதமன், ச. குமரன், மு.வேலவன், சொ. அன்பு ஆகியோர் உரையாற்றினர். முன்னதாக பாவலர் கீர்த்தி, சி. அருள்தாசு ஆகியோர் இன எழுச்சிப் பாடல்களை பாடினர். கழகத் தோழர்கள் மற்றும் பொது மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

**• அம்பேத்கர், புரட்சிக் கவிஞர் விழாக்கள்**

**• சிற்பி ராசன் தொடர் நிகழ்ச்சிகள்**

**• நூல் வெளியீடு**

**• புதிய படிப்பகம் திறப்பு**

**• புதிய பூபாளம் குழு கலை நிகழ்ச்சி**


வடசென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழக சார்பில் ஏப்.29 அன்று பெரம்பூர் பழனியாண்டவர் கோயில் தெருவில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. புலவர் புலமைப் பித்தன், துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் சு. குமாரதேவன் உரை யாற்றினர்.


தொடர்ந்து ஏப்.30 ஆம் தேதி மறைந்த கழகச் செயல்வீரர் பத்ரிநாராயணன் நினைவுநாளையொட்டி அன்று காலை அவரது நினைவிடத்தில் கழகத் தோழர்கள், வீரவணக்கம் செலுத்தினர். அன்று மாலை பத்ரி நினைவு நாளையொட்டி வி.எம்.சாலை, பெரியார் சிலை அருகே தமிழர் உரிமைகளை மீட்டெடுப்போம் என்ற தலைப்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சமர்பா குழுவினர் எழுச்சி இசை நடைபெற்றது. கழகத் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் குமாரதேவன், குமரன் , அன்பு தனசேகரன், எழுத்தாளர் ப.செயப்பிரகாசம் ஆகியோர் உரை யாற்றினர்.

### சென்னையில் இனப்படுகொலை கண்ட நாள் மே 16 இல்

சென்னையில் மே 16 அன்று "குருதியில் உறைந்த மே 17" - இனப் படுகொலை கண்டனப் பொதுக் கூட்டம் கழக சார்பில் சென்னை எம்.ஜி.ஆர். மார்க்கெட் பகுதியில் நடைபெற இருக்கிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன், துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், இதழாளர் அய்யநாதன் மற்றும் தோழர்கள் உரையாற்றுகிறார்கள். தேனிசை செல்லப்பா எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெறு கிறது. இன வெறி தாக்குதலில் பலியான தமிழர்கள் பற்றிய புகைப்பட கண்காட்சி, மக்கள் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

மே 12 ஆம் தேதி சென்னைக்கு அருகே உள்ள கூடுவாஞ்சேரியில் தமிழர் இன உரிமைகளை மீட் டெடுப்போம் என்ற தலைப்பில் கழகக் கூட்டம் நெல்லிக்குப்பம் சாலையில் நடைபெற இருக்கிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் வேல்முருகன் (பா.ம.க.), ம. சமத்துவமணி (ஒருங்கிணைப்பாளர், சமூகநீதிப் பேரவை) உரையாற்றுகிறார்கள். தோழர் சிற்பி ராசன், மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடை பெறுகிறது. சென்னை மாவட்டத்தில் கழகப் பணிகள் தொடர்ந்து தீவிரமாக நடந்து வருகின்றன.



# பரப்புரை பயணக் குழுவில் பங்கேற்றத் தோழர்கள்

பறை இசை : மேட்டூர் குமரப்பா, மேட்டூர் அண்ணா துரை.

பாடல்கள் : மேட்டூர் கோவிந்தராசு, மேட்டூர் முத்துக்குமார், திருப்பூர் தியாகு.

பரப்புரை : திருச்சி புதியவன், சேலம் கோகுலகண்ணன், தூத்துக்குடி பால்பிரபாகரன்.

மந்திரமா? தந்திரமா? : சிற்பி இராசன், பெரம்பலூர் தாமோதரன் (பெரம்பலூர் மாவட்டம் மட்டும்)

பயணத்தில் பங்கேற்ற தோழர்கள்: மேட்டூர் முத்துராஜ், பெருந்துறை அர்சுன் மற்றும் துரை. காங்கயம் பாண்டியன், செம்பட்டி ஆல்பர்ட், திருப்பூர் இராவணன் மற்றும் சம்பூகன். பெரம்பலூர் சுதாகர், சென்னை நாத்திகன், சுகுமார் மற்றும் சசிகுமார், திண்டுக்கல் நாகராஜ், பொள்ளாச்சி கா.சு.நாகராஜ், பிரபாகரன் மற்றும் இராசேந்திரன், கோவை நாகராஜ்.

பயணத்தில் வந்து சென்றவர்கள்: மதுரை தமிழ்ப்பித்தன் மற்றும் முருகேசன். கொளத்தூர் அறிவுச் செல்வன், திருப்பூர் மணி, திருப்பூர் துரைசாமி. சூலூர் வீரமணி மற்றும் பன்னீர்செல்வம். பொள்ளாச்சி வெற்றிவேல் மற்றும் மணிசங்கர். சென்னை ஜான், கொளத்தூர் விசு, மேட்டூர் ஆர்.எஸ். சவுந்தர், கோவை பிரகாஷ், கொளத்தூர் குமாரசாமி, பொங்கலூர் கார்த்தி, அவினாசி செந்தில்குமார்.

பயணக் குழுத் தலைவர் : இராவணன்

பயண ஒருங்கிணைப்பாளர் : தாமரைக்கண்ணன்

### மக்கள் வழங்கிய நிதி

சாதி, தீண்டாமை எதிர்ப்புப் பயணத்தில் தோழர்கள் மக்களிடம் உண்டியல் மூலமாக நிதி சேகரித்தனர். இதில் நன்கொடையாகவும், உண்டியல் நிதியாகவும் மக்கள் வழங்கிய தொகை ரூ.76,433.

பரப்புரைப் பணத்தில் கழக வெளியீட்டு நூல்கள் விற்பனை மூலம் கிடைத்த தொகை : ரூ.13,500

**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
**தொடர்புக்கு புதிய எண்:**
✆ 90030 87605

# சேலம் மாவட்ட பெரியாரியல் பயிற்சி முகாம்

**மே 22, 23 – இடம் : பேரூராட்சி, திருமண மண்டபம், இடங்கன் சாலை, இளம்பிள்ளை, சேலம் மாவட்டம்.**

மே 22 : காலை 9 மணிக்கு வகுப்புகள் தொடக்கம். 'பெரியாரியலின் இன்றையத் தேவை' எனும் தலைப்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், சோதிட மோசடி, உலகம் தோன்றியது எப்படி என்ற தலைப்பில் விளக்கப் படங்களுடன் மருத்துவர் எழிலன் ஆகியோர் காலை அமர்விலும்;

பிற்பகல் அமர்வில் பெண்ணுரிமை எனும் தலைப்பில் பேராசிரியர் சரசுவதி, பெரியார் நடத்திய போராட்டங்கள் எனும் தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியும், வகுப்புகளை நடத்துகிறார்கள்.

தோழர்கள் பங்கேற்கும் குழு விளையாட்டு - குறும்படம் திரையிடல்களும் உண்டு.

மே 23 : முதல்நாள் பயிற்சி பற்றி பயிற்சியாளர்களின் புரிதல் - மதிப்பீடுகளை தோழர்கள் முன் வைப்பார்கள்.

"பெரியார் திராவிடர் கழகம் எதிர் நோக்கும் பிரச்சினைகள்" எனும் தலைப்பில் விடுதலை இராசேந்திரன், "கடவுள்" எனும் தலைப்பில் கொளத்தூர் மணி வகுப்புகளை எடுப்பர்.

மதிய உணவுக்குப் பிறகு "புராணங்கள்" எனும் தலைப்பில் சிற்பி ராசன் வகுப்பு எடுப்பார். தொடர்ந்து பயிற்சியாளர்கள் எழுப்பும் அய்ய வினாக்களுக்கு தலைவர். பொதுச்செயலாளர்கள் விளக்கமளிப்பார்கள். மாலை 6 மணியளவில் பயிற்சி முகாம் நிறைவடையும். சேலம் மாவட்டத் தோழர்கள் பங்கேற்கும் இந்த முகாமுக்கு இளம்பிள்ளைப் பகுதி தோழர்கள் சிறப்பான ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

### நன்கொடை

திருச்சி மாவட்டக் கழக பொருளாளர் தோழர் புதியவனின் தம்பி த. செல்வகுமார்-இரா.ரேவதி ஆகியோர் மணவிழா மகிழ்வாக பெரியார் முழக்க வளர்ச்சிக்கு ரூ.1000-மும்

திருச்சி மாவட்ட செயலாளர் தோழர் மனோகரன் ரூ.500-ம்

சீரங்கம் கழகத் தோழர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து ரூ.200-ம்

கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் நன்கொடையாக வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

போர்க் குற்றங்களை விசாரித்து, மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்துள்ளது இலங்கை அரசு என்று அறிவித்துள்ளது.

- இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்துள்ள அய்ரோப்பிய ஒன்றியம் இலங்கை அரசுக்கு ஏற்றுமதிக்காக வழங்கி வந்த வரிச் சலுகையை (ஜி.எஸ்.பி - பிளஸ் வரிச் சலுகை) ரத்து செய்துவிட்டன.
- இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறைக்கான ஆலோசகர் பதவியை ஏற்குமாறு ராஜபக்சே இந்தியாவின் 'இன்போசிஸ்' நிறுவனத் தலைவரான என்.ஆர்.நாராயணமூர்த்தி எனும் பார்ப்பனரைக் கேட்டுக் கொண்டார். அங்கே ராணுவம் நடத்திய தாக்குதல்களால் நாராயண மூர்த்தியே கடந்த 2009 ஆம் ஆண்டு, பிப்.18 ஆம் தேதி இந்தப் பொறுப்பை ஏற்க மறுத்து விட்டார்.
- அதேபோல் இந்தியாவின் விவசாய விஞ்ஞானியாக பார்ப்பனர்கள் உயர்த்திப் பிடிக்கும் பார்ப்பனரான எம்.எஸ். சாமிநாதன்கூட, வடக்கு, கிழக்கு மாநிலங்களில் 'பசுமைத் திட்டங்களை' உருவாக்கிட இலங்கை அரசு விடுத்த அழைப்பை நிராகரித்து விட்டார்.

இப்படி மனிதநேயமற்ற பார்ப்பனர்கள்கூட இலங்கை அரசோடு தங்களைத் தொடர்புபடுத்திடத் தயங்கி நிற்கும்போது இந்தியாவின் இந்தித் திரைப்படத் துறை வெளியுறவு அமைச்சரும் இலங்கை அரசும் இணைந்து நடத்தும் கூட்டுச் சதித் திட்டத்தை நிறைவேற்ற மகிழ்ச்சியுடன் முன் வந்திருக்கிறது.

இத் திட்டத்தின்படி கொழும்பு நகரில் 'சர்வதேச ஆடை அணி வகுப்புக் காட்சி' (ஃபேஷன் ஷோ), இந்திய தொழிலாளர் சம்மேளனத்தின் ஒரு நாள் வர்த்தகக் கூட்டம் டி.20 கிரிக்கெட் விளையாட்டு, நடிகர் நடிகைகளுக்கு விருது வழங்கும் விழா ஆகியவற்றோடு பார்ப்பன இயக்குனர் மணிரத்தினம் தயாரித்துள்ள 'இராவணன்' திரைப்படமும் திரையிடப்பட இருக்கிறது. இப்போது தமது திரைப்படம் கொழும்பில் திரையிடப்படப் போவதில்லை என்று இயக்குனர் மணிரத்தினம் அறிவித்துள்ளார்.இப்படிப்பட்ட அறிவிப்புகளால் இந்த நிகழ்வுக்கு தமிழர்களிடையே எழுந்துள்ள எதிர்ப்புகளை அடக்கி, முனை மழுங்கச் செய்யலாம் என்ற உள்நோக்கத்துடனேயே இத்தகைய அறிவிப்புகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.


இந்த நிலையில், இந்தித் திரைப்படத் துறையினரும், இந்தியத் தொழில் முதலாளிகளும், டெல்லி ஆட்சியும், தமிழர்களின் உணர்வுகளை மதிக்காது நடத்தும் கொழும்பு திரைப்படத் திருவிழா கொண்டாட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று சென்னை மெமோரியல் ஆல் அருகே கடந்த மே 8 ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தகவல் தொழில் நுட்பத்துறை இளைஞர்கள் நடத்தும் 'தமிழரைக் காப்போம்' என்ற அமைப்பு, இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது.

கழக சார்பில் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்று, இந்திய அரசையும், இந்தி திரைப்பட உலகினரையும் கண்டித்து விழாவை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார். தமிழ்த் தேசிய விடுதலை இயக்க பொதுச்செயலாளர் தியாகு, கவிஞர் தாமரை, திரைப்பட இயக்குனர்கள் ராம், கவுதமன், பொறியாளர் செந்தில் உள்ளிட்ட பலரும் பேசினர். காலை 10 மணிக்கு தொடங்கி, ஆர்ப்பாட்டம் ஒரு மணி வரை கொளுத்தும் வெயிலில் நடந்தது. சர்வதேச திரைப்பட விழாவை **கொழும்பில் நடத்தாதே**; யுத்த குற்றவாளிகளைக் காப்பாற்ற இந்திய அரசே இந்தித் திரையுலகமே துணை போகாதே! திரைப்படக் கலைஞர்களே! விருது வழங்கும் விழாவைப் புறக்கணியுங்கள்! என்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன. பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் பெருமளவில் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 13th May 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 மே 20, 2010 புரட்சி 9 முழக்கம் 19 விலை: ரூ.2.50

### தொடங்கவிருக்கும் விடுதலைப்போருக்கு தோள் கொடுப்போம்

# முள்ளி வாய்க்கால் முடிந்த கதை அல்ல

## சென்னை கூட்டத்தில் மக்கள் உறுதி ஏற்றனர்

ஈழத்தின் முள்ளி வாய்க்கால் படுகொலைக்கு கண்டன பொதுக் கூட்டம் ‘குருதியில் உறைந்த மே 17’ என்ற தலைப்பில் சென்னை எம்.ஜி.ஆர். நகரில் மே 16 ஆம் தேதி மாலை தேனிசை செல்லப்பா எழுச்சி இசையுடன் தொடங்கியது. ‘முள்ளி வாய்க்காலில் சிந்திய குருதி - தமிழின விடியலை முன் நகர்த்தும் இது உறுதி’ என்று மேடையில் பின்புறம் பதாகை அமைக்கப்பட்டிருந்தது. மேடைக்கு அருகே அமைக்கப்பட்டிருந்த ஒளிச்சுடரை கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஏற்றி, கூட்டத்தில் உறுதிமொழியைப் படித்தார். கரங்களில் மெழுகு வர்த்தியை ஏந்திய கூட்டத்தினர், உறுதி மொழியைத் திருப்பிக் கூறினர்.

“முள்ளி வாய்க்கால் முடிந்த கதை அல்ல; முள்ளி வாய்க்காலில் புதைக்கப்பட்ட வீர வித்துக்களுக்கு, வீர வணக்கம்; அமைந்து விட்ட தமிழ் ஈழ அரசை சூழ்ச்சியால் சிதைத்து, அழித்த இந்திய பார்ப்பனிய சர்வதேச சூழ்ச்சிகளை மக்கள் மன்றத்தில் தொடர்ந்து அம்பலப்படுத்துவோம். விரைவில் தொடங்க இருக்கும் விடுதலைப் போராட்டத்துக்கு தாய்த் தமிழகம் தோள் கொடுக்கும் என்று உறுதி ஏற்கிறோம். முள்ளி வாய்க்கால் முடிந்த கதை அல்ல; முள்ளி வாய்க்கால் முடிந்த கதை அல்ல.”

- என்ற உறுதி மொழி எடுக்கப்பட்டது.

தொடர்ந்து வீ. பொற்கோவன் வரவேற்புரையாற்ற கரு. அண்ணாமலை தலைமையில் தோழர்கள் செ.செயசீலன், மு.வெங்கடேசன், சு. துரைராசு முன்னிலையில் பொதுக் கூட்டம் தொடங்கியது. அன்பு தனசேகர், வழக்கறிஞர் அமர்நாத், இதழாளர் அய்யநாதன், பொதுச்செயலாளர்கள் விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன், துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் இந்திய ஆட்சியையும், துரோகத்துக்கு துணை நின்ற தி.மு.க. ஆட்சியையும் கண்டித்து உரையாற்றினர். தஞ்சை தமிழன் நன்றி கூறினார்.

இனவெறித்தாக்குதலுக்கு பலியான தமிழர்களின் புகைப்படக் கண்காட்சி வைக்கப்பட்டிருந்தது. ஏராளமான பொது மக்கள் புகைப்படக் காட்சிகளைக் கண்டு, கண்ணீர் சிந்தினர்.

**கழகத்தில் இணைந்தனர்**

**எம்.ஜி.ஆர் நகர் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் சோ. மதிவாணன், ம.முரளி, தி. வெங்கடேசன், செ.தமிழ்ச் செல்வன், அ. தினேஷ்குமார், விஜயகுமார் ஆகியோர் பெரியார் திராவிடர் கழகத்தில் இணைந்தனர். பொதுச் செயலாளர்கள் முன்னிலையில் கழகத் தலைவர் அனைவருக்கும் மேடையில் ஆடை போர்த்தினார்.**

# பார்ப்பன சிரிப்பு நடிகரும் – நடிகவேள் எம்.ஆர்.ராதாவும்

மயிலாப்பூர் அக்கிரகாரத்தின் செல்லப்பிள்ளை எஸ்.வி. சேகர். இப்போது தி.மு.க.வில் கலைஞர் கருணாநிதியின் செல்லப்பிள்ளையாகிவிட்டார். எஸ்.வி. சேகர் நாடகம் ஒன்றில் பேசிய கலைஞர் கருணாநிதி, எஸ்.வி. சேகர், நடிகவேள் எம்.ஆர்.ராதாவைப் போல் நாடகங்களை நடத்துவதாகப் பாராட்டியிருக்கிறார். நல்லவேளை! இந்த செப்பு மொழிகளையெல்லாம் கேட்க வாய்ப்பில்லாமல் நடிகவேள் எம்.ஆர்.ராதா மரணமடைந்துவிட்டார்.

நடிகவேள் நூற்றாண்டு விழா கூட வந்து போய்விட்டது. அவருக்கு ஒரு விழா நடத்தக்கூட கலைஞர் கருணாநிதிக்கு மனம் வரவில்லை. அப்படிப்பட்டவர் இப்போது பார்ப்பன காமெடியன் எஸ்.வி.சேகரோடு ஒப்பிட்டு நடிகவேளை அவமானப்படுத்தியிருக்கிறார்.

தமிழ்நாடக வரலாற்றில் புரட்சிகர அத்தியாயங்களுக்கு சொந்தக்காரர் நடிகவேள்! அவரின் நாடக அரங்குகள், அக்கிரகாரத்தை அலற வைத்தன. அவர்தடைகளை எதிர் கொண்ட கலகப் புயல்! பெரியாரின் கொள்கைகளை மேடைகளில் நாடகமாக்கிய கொள்கைக்காரன். நாடக வசனங்களை காவல்துறையிடம் காட்டி, ஒப்புதல் பெற வேண்டும் என்ற நாடகக் கட்டுப்பாடு சட்டத்தை அன்றைய காங்கிரஸ் ஆட்சி கொண்டு வந்ததே - நடிகவேள் எம்.ஆர்.ராதா நாடகத்திற்காகத்தான். நாடகத் தடைச் சட்டம் வந்த பிறகு மட்டும் - அவர் கைது செய்யப்பட்டது 52 தடவை. நடிகவேள் நாடகங்கள் - கீழ்க்கண்ட பாடல் வரிகளுடன் தான் தொடங்கும்.

“வளமார் திராவிடர் வாழ்ந்த
கதையினை அறிந்திருப்பாய் தமிழா
வம்புகள் மிகுந்த ஆரியரால் அது
அழிந்த நிலை கண்டு வைக்கம்
தனியே வீரப்போரிட்டார்
வாழ்வளித்த நம் பெரியார்”

வம்புகள் மிகுந்த ஆரியத்துக்கு எதிராக நாடக மேடையைச் சூடற்றிய சுமரியாதைக்காரன் தான் நடிகவேள்! யார் இந்த எஸ்.வி.சேகர்?

நகைச்சுவை என்ற பெயரில் தமிழின உணர்வுகளை ‘நக்கலடித்தவர்’ இந்தப் பூணூல் திருமேனி! இன்னும் முதுகில் முப்புரி நூலை தொங்கவிட்டுக் கொண்டு திரிபவர்.

கொலைக்குற்ற விசாரணையில் இருக்கும் காஞ்சி சங்கரனின் அறிவிக்கப்படாத செயலாளர். கொலை வழக்கில் ஜெயலலிதா காஞ்சி சங்கரனைக் கைது செய்ய உத்தரவிட்டதால் அ.தி.மு.க. பார்ப்பனத் தலைமைக்கு எதிராகவே போர்க் கொடி உயர்த்தியவர். ஜெயலலிதா தலைமை மீது இந்த பார்ப்பன நடிகருக்கு கருத்து மாறுபாடு உருவானதே சங்கராச்சாரியைக் கைது செய்ததால்தான்! இப்போது தி.மு.க. ஆட்சியில் சங்கராச்சாரி வழக்கு ‘புஸ்வானம்’ ஆகிவிட்டது. அரசு சாட்சிகளே பல்டி அடிக்கின்றன. அரசு வேடிக்கை பார்க்கிறது.

“கலைஞர் பதவியிலிருந்தால் காஞ்சி சங்கராச்சாரி ஸ்வாமிகளை கைது செய்திருக்கவே மாட்டார், இதை கலைஞரே என்னிடம் தெரிவித்தார்” என்று ‘குமுதம் ரிப்போர்ட்டர்’ வார ஏட்டுக்கு சில மாதங்களுக்கு முன் பேட்டி அளித்ததும் இதே சேகர் தான்! தமிழ்நாடு “பிராமண சங்க”த்தின் முக்கிய தலைவர்களில் ஒருவர். அந்த சங்கத்தின் மாநாடுகளில் பங்கேற்றுப் பேசி வருபவர்.

பெரியார் படத்துக்கு தி.மு.க. ஆட்சி நிதி வழங்கியதை எதிர்த்து சட்டசபையில் கிண்டல் செய்தவர்; சத்திய மூர்த்தி அய்யர் வரலாற்றைப் படம் எடுத்தால், அரசு நிதி அளிக்குமா என்று கேள்வி எழுப்பியவர். (இதற்காக எஸ்.வி.சேகர் உருவ பொம்மைகளை பெரியார் திராவிடர் கழகம் எரித்து போராட்டம் நடத்தியது)

‘கலகக்காரர் பெரியார்’ நாடகத்தை தோழர் ராமசாமி - தமிழகம் முழுதும் நடத்தியபோது கோவை மாநகராட்சி அரங்கிலும் நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கு சில நாட்களுக்கு முன் அதே கோவை மாநகராட்சி அரங்கில் எஸ்.வி.சேகர் நாடகம் நடந்தது. அதில் பேசும் போது, “மக்கள் வரிப் பணத்தில் நடத்தப்படும் மாநகராட்சி அரங்குகளில் பெரியார் நாடகத்தை அனுமதிக்கக் கூடாது” என்று வாய்க் கொழுப்போடு (அப்போது நடந்தது பார்ப்பன ‘அம்மா’ ஆட்சி என்ற திமிரில்) பேசியவர் இதே நடிகர் தான்.

தலித் ஒருவர் மடாதிபதியாக வருவதை நியாயப்படுத்தி, ‘ஞான பீடம்’ என்ற நாடகம் ஒன்று சென்னையில் நடந்தது. அந்த நாடகத்தை எழுதி இயக்கியவரும் மாலி என்ற பார்ப்பனர்தான். உடனே எஸ்.வி.சேகர், பார்ப்பனர் ஒருவர் இப்படிப்பட்ட நாடகத்தை நடத்தலாமா என்று காஞ்சி ஜெயேந்திரனிடம் ‘கோள்’ மூட்டினார். காஞ்சி ஜெயேந்திரன் மாலியை தனது மடத்துக்கு அழைத்து, “இது போன்ற நாடகங்களை நிறுத்து; எஸ்.வி. சேகரைப் போல் நாடகம் போடு” என்று மிரட்டினார். முற்போக்கு எழுத்தாளர்கள் - இந்த மிரட்டலைக் கண்டித்து ஒரு கூட்டமே நடத்தினார்கள். அப்படி சங்கராச்சாரியால் பரிந்துரைக்கப்படும் எஸ்.வி. சேகர் நாடகங்களைத்தான் நடிகவேள் ராதாவுடன் ஒப்பிட்டுப் பாராட்டுகிறார், கலைஞர்!

ஜெயலலிதா இவரை மயிலாப்பூர் சட்டமன்ற வேட்பாளராக அறிவித்தவுடன், முதல் ஆசியை வாங்குவதற்கு “பிராமண சங்கத் தலைவரிடம்” தான் ஓடினார். அதை புகைப்படம் எடுத்து, பத்திரிகைகளுக்கும் அனுப்பினார்.

விஜய் தொலைக்காட்சியில் இந்தப் பார்ப்பன நடிகர் தொடர் நிகழ்ச்சி ஒன்றை வழங்கியபோது, அதில் பெரியார் இயக்கத்தையும் தி.மு.க.வையும் கிண்டல் செய்வதற்கும், சங்கராச்சாரியின் பெருமையைப் பரப்புவதற்குமே பயன்படுத்தினார். இந்த நிகழ்ச்சியில் பேட்டி கண்ட தலைவர்களை எல்லாம் கிண்டல் கேலி செய்து கோமாளிகளாக்கிக் காட்டவே விரும்பினார். ஆனால் இதே நிகழ்ச்சியில் காஞ்சி ஜெயேந்திரன்

(4 ஆம் பக்கம்)

# இன அழிப்பு – பல்வேறு வடிவங்களில்

இன அழிப்பு என்றால், அது மனிதர்களைக் கொன்று குவிப்பது மட்டுமே அல்ல. பல்வேறு வடிவங்களில், இன அழிப்பு நிகழ்கிறது. இலங்கையில் இத்தகைய இன அழிப்புத் தொடங்கப்பட்டு, எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன. பல்வேறு வடிவங்களில் திட்டமிட்டு, அவை அரங்கேற்றப்பட்டன. அதன் தொடர்ச்சியாக வெளிப்பட்ட உச்ச கட்டம் தான் முள்ளிவாய்க்காலில் மே மாதம் நடந்து முடிந்த இன அழிப்பு.

1949 ஆம் ஆண்டு ஆக. 12 ஆம் நாள் இனப் படுகொலைக்கு எதிரான சர்வதேச ஜெனிவா பிரகடனம் வெளியிடப்பட்டது. ஜெனிவா உடன்பாட்டுக்கு எதிரான போர்க் குற்றங்களை இலங்கை சர்வதேச ஆதரவுடன் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, தமிழர்கள் மீது திட்டமிட்டு கட்டவிழ்த்துவிட்டது. இன அழிப்புகள் திட்டமிட்டு, எப்படி நடத்தப்படுகின்றன? இந்தக் கேள்விக்கான விடையைப் புரிந்து கொள்வதற்கு தொன்மங்களின் வேர்களைத் தேடிப் போக வேண்டும். அய்ரோப்பாவில் யூதர்கள் மீதான வெறுப்பு திடீரென்று வந்துவிடவில்லை. அதற்கு நீண்ட காலப் பின்புலம் உண்டு. அந்த வெறுப்பும் பகையும் காலம்காலமாக வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. அதேபோல் ஈழத் தமிழர்கள் மீது சிங்களர்களின் வெறுப்புக்கான மூலத்தை தொன்மங்களிலிருந்து தேட வேண்டியிருக்கிறது. இத்தனைக்கும் யூதர்கள் அய்ரோப்பாவில் குடியேறியவர்கள். ஆனால், தமிழர்களோ, ஈழத்தின் மண்ணின் மைந்தர்கள். சிங்களர்கள்தான் வந்தேறிகள். சிங்களர்களின் புனித நூலான 'மகா வம்சம்' இந்த வரலாற்று உண்மையை ஒப்புக் கொள்கிறது. ஆனாலும், அதே 'மகாவம்சம்' தமிழர்கள் மீதான வெறுப்பை விதைத்தது. சிங்கள பேரினவாதத்துக்கான ஊற்றுக்கண் மகாவம்சமேயாகும். காலம்காலமாக மகாவம்ச மன நிலைக்கு உள்ளான சிங்களர்கள், பூர்வீகத் தமிழர்களின் உரிமைகளைப் புறக்கணித்து, இலங்கையை ஒற்றைப் பிரதேசமாக்கி, புத்த சிங்களர்களின் நாடாக அறிவித்துவிட்டனர். மதச் சார்பற்ற கலாச்சாரத்தை மதித்து வாழ்ந்த தமிழர்களை வெறுப்புக்கும் பகைமைக்கும் உரியவர்களாக சிங்களம் நடத்தியதற்கு மகாவம்ச சிந்தனைதான் காரணமாகும்.

2002 ஆம் ஆண்டு உருவான போர்நிறுத்த ஒப்பந்தத்தை தன்னிச்சையாக முறித்தது இலங்கை அரசு. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர்கள் மீது இலங்கை ராணுவம் தாக்குதலை நடத்தியபோது தமிழர்கள், அங்கிருந்து எங்கே பாதுகாப்பு தேடி ஓடினார்கள்? சிங்களர்கள் பகுதிக்கா? அல்ல; விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டின் கீழ் நிர்வகித்து வந்த பகுதியைத்தான் அவர்கள் தேடிப் போனார்கள். அங்கே நடந்த அறிவிக்கப்படாத தமிழ் ஈழ ஆட்சியைத்தான் ஆதரித்தார்கள். அதுவே அவர்களின் அரசியல் இலக்காகவும் இருந்தது. அப்படிச் சென்றவர்களும் தற்காலிகமாக குடியேறுவதற்குப் போகவில்லை. தங்களது உடைமைகள் எல்லாம் முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் ஏதுமற்ற நிலையிலேதான் அவர்கள் புலிகள் ஆட்சிப் பகுதிக்குப் போய் அங்கேயே தங்களை குடியமர்த்திக் கொண்டார்கள். ஆனால், அவர்களை உள்நாட்டிலே புலம் பெயர்ந்தவர்களாக இலங்கை அரசு கூறியது. அது உண்மையல்ல. அவர்கள் புலம் பெயர்ந்தவர்கள் அல்ல; உடைமைகள் முற்றாக அழிக்கப்பட்டு, ராணுவத்தால் விரட்டி அடிக்கப்பட்டவர்கள் என்பதே சரி. இப்படி, பொது மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து, அவர்கள் விருப்பத்துக்கு மாறாக, விரட்டி அடிப்பதே, **மானுடத்துக்கு எதிரான குற்றம்.** அதாவது போர்க் குற்றம்.

பொது மக்களின் பாதுகாப்பு வளையங்கள் மீது தாக்குதல் நடத்துவதும், குழந்தைகளையும், பெண்களையும் கொன்று குவித்ததும், உணவு கிடைக்காமல் பட்டினி போட்டதும் போர்க் குற்றங்கள்தான். இவற்றை நீண்டகாலத் திட்டமிடல் என்ற கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும்.

நீண்டகாலமாகவே தெற்கில் (கொழும்பு பகுதி) வாழும் தமிழர்கள் அச்சத்தின் பிடியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது, தமிழர் பகுதியில் வாழும் தமிழர்கள் உடைமைகள் அழிக்கப்பட்டுவிட்டன. வாழ்விடங்கள் பறிக்கப்பட்டன. இராணுவத்தின் பிடிக்குள் அவர்கள் தவிக்கிறார்கள். **இது உளவியல் ரீதியான அழித்தல்.**

மீண்டும் தமிழர்கள், தங்கள் பகுதியில் குடியமர்த்தப்படவில்லை. அவர்களுக்கான மீள் குடியேற்ற உரிமைகளை ராணுவம் பறித்து வைத்திருக்கிறது. வளர்ச்சிப் பணிகள் என்பதாகக் கூறிக் கொண்டிருக்கும் திட்டங்களை நிறைவேற்றும் உரிமையை ராணுவம் எடுத்துக் கொண்டு, அதற்காக சர்வதேச உதவிகளைக் கோருகிறது. **இது கட்டமைப்புகளை அழித்தல்** ஆகும்.

'வளர்ச்சி'த் திட்டம் என்று கூறிக் கொண்டு தமிழர்களின் பாரம்பர்யப் பகுதியில் இராணுவம் சிங்களர்களைக் குடியேற்றுகிறது. இதனால் தமிழர் பகுதிகளிலேயே தமிழர்களை சிறுபான்மையினராக்கப்பட்டு, சிங்களர் வாழும் பிரதேசமாக மாற்றப்படுகிறது. மக்கள் தொகை வீதம் மாற்றியமைக்கப்படுகிறது. **இனச் சமன்பாடுகள் மீதான அழித்தல்.**

இப்போது அடைக்கலம் தேடி தமிழகம் வரும் தமிழர்கள், தமிழர் பகுதிகளில் புத்தர் கோயில்கள் கட்டப்படுவதாகவும், தமிழர் வாழும் ஊர்ப் பெயர், வீதியின் பெயர்களை மாற்றி சிங்களப் பெயரிடப்படுவதாகவும் கூறுகிறார்கள். **இது கலாச்சார அடையாள அழிப்பு.**

இப்படி - இனப்படுகொலை என்ற அழித்தொழித்தல் வடிவம் மட்டுமின்றி உளவியலாகவும், இனச் சமன்பாடுகளைக் குலைத்தும், கலாச்சார அடிப்படையிலும் வாழ்வியல் கட்டமைப்புகளை சிதைத்தும் அழிப்புகள் பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்து கொண்டிக்கின்றன. இவை எல்லாமுமே ஜெனிவாவின் உடன்பாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளேயாகும்.

**டெல்லிக் கருத்தரங்கில் கொளத்தூர் மணி ஆற்றிய உரையிலிருந்து (ஏப்.15)**

# அட்சய திருதியைக்கு அரிய ஆலோசனைகள்

கடந்த ஒரு வார காலமாகவே பத்திரிகைகள் பக்கம் பக்கமாக விளம்பரங் களையும், மலர்களையும் திக்குமுக்காடும் அளவுக்கு வெளியிட்டு குவித்து வருகின்றன. எல்லாம் அட்சய திருதியைக்கான வர்த்தக விளம்பரங்கள்தான்! ஒரு பக்கம் கடவுள்களின் வண்ணப் படங்கள்! தாமரையில் வீற்றிருக்கும் நான்கு கைகளைக் கொண்ட மகாலட்சுமி. உடல் முழுதும் நகைகள்! (எந்தக் கடையில் வாங்கியது? பவுன் என்ன விலை என்றெல்லாம் எவரும் கேட்டு விடாதீர்கள்!) பசுமாட்டு உருவத்தில் உள்ள கஜலட்சுமி! இப்படி பக்திமணம் பரப்பும் படங்கள். அதற்கு அருகிலேயே நகைக்கடை விளம்பரங்கள். அட்சய திருதியை அன்று ஒரு 'பொட்டு' தங்கமாவது வாங்கிவிட வேண்டுமாம்; வாங்கி விட்டால் ஆண்டு முழுதும் செல்வமும், நகையும் கொழித்துக் கொண்டே இருக்குமாம்! எனவே கடன் வாங்கியாவது, ஒரு 'கிராம்' நகையாவது வாங்கி விடுங்கள் என்று தமிழ்நாட்டு மக்களுக்கு 'ஆன்மீக திலகங்கள்' அறிவுரை கூறுகிறார்கள். அந்த ஆன்மீகங்கள் யார் தெரியுமா? தமிழ்த் திரைப்பட நடிகைகள்தான்!

அட்சய திருதியையில் நகை வாங்கினால் பவுன் விலை கடகடவென சரியும் என்று எவராவது கூற மாட்டார்களா என்று நமக்கும் ஒரு ஏக்கம் உண்டு. "நல்லா இருக்கே உமது ஆசை; நடக்காத உறுதி மொழி எல்லாம் தந்து, நாங்கள் அம்பலப்பட்டுப் போவதில் அப்படி என்னப்பா, உனக்கு மகிழ்ச்சி?" என்று, எதிர் கேள்வி போட்டு விடுகிறார்கள். நமக்குத் தெரிந்த, ஒரு பக்தி பிரமுகரிடம் அட்சய திருதிதைக்கு என்ன அர்த்தம் என்று கேட்டேன். "உண்மையிலேயே அது தானம் செய்ய வேண்டிய நாள்; அன்று ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும்; குறிப்பாக சாப்பாடு போட வேண்டும் என்பதுதான் அய்தீகம்" என்றார். "பிறகு அது எப்படி தங்கம் வாங்கும் நாளாக மாற்றப்பட்டது? அய்தீகத்தை இப்படி எல்லாம் மாற்றுவதற்கு இராமகோபாலனோ, ஆலயத் திருப்பணிக் குழு தலைவர்களோ, மடத் தலைவர்களோ, ஏன் வாயைத் திறக்கவில்லை?" என்று எவரும் கேட்கக் கூடாது. கேட்டாலே அது மத விரோதமாகிவிடும்.

அட்சய திருதி இப்போது அடுத்த கட்டத்துக்கும் முன்னேறியிருக்கிறது. "அட்சய திருதியில் அய்ஸ்வர்யத்தை உங்கள் இல்லத்துக்கு எடுத்துச் செல்லுங்கள்" என்ற தலைப்பில் செல் பேசி, துணி துவைக்கும் எந்திரம், குளிர்சாதனப்பெட்டி என்று அனைத்துவிதமான நுகர் பொருள்களும் 'அட்சயதிருதி' விற்பனை பட்டியலில் இடம் பிடித்து விட்டன. ஆக, பக்தியும், வர்த்தகமும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாமல் கைகோர்த்து வளர்ந்து கொண்டிருக்கிறது.

என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் எப்போதும் நெற்றியில் 'வண்ணக் கோலத்தோடு' தனது பக்தியைக் காட்டிக் கொள்வார். (அதாவது விபூதி, அதற்கு நடுவே குங்குமம்) "இது என்ன சார் வேடம்? பக்தி எல்லாம் இப்போது வியாபாரமாகிவிட்டது" என்று நான் கூறியபோது, அவருக்கு மூக்குக்கு மேலே கோபம் வந்துவிட்டது. பக்தியை இப்படி எல்லாம் கிண்டலடிக்காதீர்கள் என்றார். அவரிடம் இந்த விளம்பரங்களை எடுத்துக் காட்டியபோது, நமட்டுச் சிரிப்பு ஒன்றைக் காட்டிவிட்டு நழுவிவிட்டார்.

பக்தியை மக்களிடம் கொண்டு செல்வதற்கு இனி, கோயில், பஜனை, கதாகாலட்சேபங்கள், விரதங்கள், பண்டிகைகள் போன்றவை பயன் தருமா? இதுபற்றி பக்தர்கள், ஆழமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பது அடியேனின் தாழ்மையான ஆலோசனை.

பக்தியை - கோயிலிலிருந்து கழற்றி விட்டுவிட்டு 'சூப்பர் மார்க்கெட்', 'நகைக் கடைகள்' போன்றவைகளோடு இணைத்துப் பாருங்கள்! பக்தி ஒகோ என்று பெருக்கெடுத்து ஓடுமய்யா!

உதாரணமாக - கீழ்க்கண்டவற்றை பரிந்துரைக்கிறோம்.

இராமநவமியை எல்லோரும் புது செருப்பு வாங்கும் நாளாகக் கொண்டாடலாம். இராமனின் செருப்பு தானே, 14 ஆண்டு காலம் பாரத தேசத்தை ஆட்சி செய்தது.

விநாயகர் சதுர்த்தியை சோப்பு வாங்கி கொண்டாடலாம். பார்வதியின் உடல் அழுக்கிலிருந்து தானே விநாயகனே பிறந்தான்!

கிருஷ்ணன் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்குக்கூட நம்மிடம் ஒரு திட்டம் இருக்கிறது. வசதி வாய்ப்புள்ளவர்கள் அதைப் பயன்படுத்திக் கொள்வார்களாக. அதற்கு கொஞ்சம் கூடுதல் செலவு அவ்வளவுதான். நட்சத்திர ஓட்டலில் இளம் ஆண் பெண் நண்பர்கள் இரவு விருந்து பார்ட்டிகளை நடத்திடலாம். நட்சத்திர ஓட்டல்கள் இதற்கு கட்டணத்தில் சலுகைக் காட்டி, கிருஷ்ண லீலா சிறப்புக் கொண்டாட்டங்களை அறிவிக்கலாம். பக்தர்கள் குதூகலமாக ஆடிப் பாடி பக்தியைக் கொண்டாடலாம்.

அதற்கு பாட்டுகள் கூட உண்டு. "நந்தகோபாலனோடு நான் ஆடுவேனே; குத்தாட்டம் போடுவேனே; ஜில்லுனு பாடுவேனே" என்ற பக்திப் பரவசமான பாடல்களை தயாரிக்கலாம். ஏ.ஆர். இரகுமானைக் கேட்டால்கூட இசை அமைத்துத் தருவார்.

பக்தியும் வியாபாரமும் கைகோர்த்துவிட்டால், பிறகு உலக வங்கி, பங்குச் சந்தை என்ற உயரத்துக்கு பக்தி எகிறி விடும். அட்சய திருதியைக்கு பொருள் வாங்க ஓடும் பக்தர்கள் இந்த அரிய ஆலோசனைகளை காதில் போட்டுக் கொள்வார்களாக!

**– கோடங்குடி மாரிமுத்து**

# தில்லி கருத்தரங்கில் வலியுறுத்தல்

## இலங்கைப் போர்க் குற்றவாளிகள் மீது விசாரணை வேண்டும்!

கடந்த ஏப்ரல் 15, 2010 அன்று தில்லி தமிழ் மாணவர்கள் அமைப்பும், ஜனநாயக மாணவர்கள் அமைப்பும் இணைந்து "பேசப்படாத இனப்படு கொலை - இலங்கையில் போர்க் குற்றங்கள்" என்ற தலைப்பிலான கருத்தரங்கினை தில்லி கான்ஸ் டிடியூசன் அரங்கில் நடத்தின. நிகழ்வில் டப்ளினில் நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் இலங்கையின் போர்க் குற்றங்களை விசாரித்து அளித்த அறிக்கை வெளியிடப்பட்டது.



நிகழ்வில் நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தில் பங்கு பெற்ற தில்லி உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி ராஜேந்தர் சச்சார், சாய்பாபா, சண்டிகர் உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி அஜித்சிங் பெயின்ஸ், காஷ்மீர் விடுதலை இயக்கத்தைச் சேர்ந்த சய்யத் அலி ஷா கிலானி, 'சீக்கிய செய்தி' இதழின் ஆசிரியர் பேரா. ஜக்மோகன்சிங், எஸ்.ஏ.ஆர். கிலானி, சி.பி.அய். எம்.எல்.இன் கவிதா கிருஷ்ணன், மணிப்பூர் மாணவர் இயக்கத்தின் மலேம் நிங்தவ்ஜா மற்றும் நவஜன் பாரத் சபாவின் டாக்டர் மிர்கங்க் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். புரட்சிகர எழுத்தாளர்கள் அமைப்பின் கவிஞர் வரவரராவ் நேரில் வர இயலாததால் தனது செய்தியையும், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை போற்றி ஒரு கவிதையும் அனுப்பியிருந்தார். அது நிகழ்வில் வாசிக்கப்பட்டது. இலங்கை மீதான நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தினை ஒழுங்கு செய்வதில் முக்கிய பங்கு வகித்தவரான மனித உரிமையாளர் சிங்களர் விராஜ் மெண்டிஸ், ஜெர்மன் நாட்டிலிருந்து இந்தியா வருவதற்கான விசாவை வழங்க இந்திய அரசு மறுத்த நிலையில் பதிவு செய்யப்பட்ட அவரது உரை திரையிடப்பட்டது. அது போன்றே நேரில் வர இயலாத நீதியரசர் கிருஷ்ணய்யர் மற்றும் பியூசிஎல் முன்னாள் தலைவர் கே.ஜி.கண்ணபிரான், இனப்படுகொலைக்கு எதிரான தமிழர்கள் அமைப்பின் பிரதிநிதி ஜன் ஜனநாயகம் ஆகியோரின் பதிவு செய்யப்பட்ட உரைகளும் திரையிடப்பட்டன.

இந்தியாவில் சுயநிர்ணய உரிமைக்கான போராட் டங்களை மேற்கொள்ளும் பல்வேறு அமைப்பு களின் பிரதிநிதிகளும், சமூக - பொருளாதார போராட்டங்களை நடத்திவரும் இடதுசாரி அமைப்புகளின் பிரதிநிதிகளும், மனித உரிமைப் போராளிகளும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு, ஈழத் தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலையை கடுமையாக கண்டித்தும் ஈழப் போராட்டத்திற்கு தங்கள் முழுமையான வெளிப்படையான ஆதர வினை தெரிவித்தும் உரையாற்றினர்.

தமிழ்நாட்டிலிருந்து இந்நிகழ்வில் கலந்து கொண்ட பெரியார் திராவிடர் கழகத் தலைவர் தா.செ.மணி தனது உரையில் "இலங்கை ஒரு முன்மாதிரி இனப் படுகொலையை நடத்தியிருக் கிறது" எனக் குற்றம் சாட்டினார். மேலும், "சாட்சி களின்றி, உலக நியதிகள், சட்டங்கள், கண்டனங்கள் ஆகிய எதை பற்றியும் எந்த அச்சமோ அக்கறையோ இன்றி இலங்கை தனது சொந்த மக்கள் மீது ஒரு முன் மாதிரி இனப் படுகொலையை நடத்தியிருக்கிறது. இந்த இனப்படுகொலையானது உயிர்களை கொல் வதாக மட்டுமின்றி, தமிழர்களின் பண்பாட்டை, நிலத்தை, அறிவுசார் வாழ்க்கையை என அனைத்தை யும் பறித்திருக்கிறது. இந்த முன் மாதிரியை பின்பற்றி உலகின் பிற ஆதிக்க அரசுகள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்த எவர் மீதும் இப்படியான இனப்படு கொலையை நடத்தலாம். காஷ்மீர், வடகிழக்கு, பஞ்சாபில் நடைபெறும் போராட்டங்களை அழிக்க வும், மற்றும் "பசுமை வேட்டை" என்ற பெயரில் பழங்குடிகள் மீது மேற் கொண்ட தாக்குதலை நியாயப்படுத்தவும் இந்த முன் மாதிரி இனப் படுகொலை பயன்படலாம். அதனால் மனித குலத்தின் ஒட்டு மொத்த நன்மைக்காக நாம் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய தருணத்தில் நிற்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

மாநாட்டில் கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

- தமிழர்கள் மீது இலங்கை அரசு நடத்திய இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்களை இந்த அவை கண்டிக்கிறது. இலங்கை அரசின் போர்க் குற்றவாளிகள் நீதி விசாரணைக்கு உட்படுத்தப் பட வேண்டும்.
- கட்டாயமாக முகாம்களில் தடுத்து வைக்கப் பட்டுள்ள அனைத்துத் தமிழர்களையும் உடனடியாக விடுவித்து அவர்கள் சொந்த வீடுகளில் குடியமர்த்தப்பட வேண்டும்.
- இலங்கை அரசு தமிழர் பகுதிகளில் மேற் கொண்டுள்ள சிங்க குடியேற்றங்களை உடனடியாக நிறுத்த வேண்டும்.
- இனப்படுகொலையை நடத்தி வரும் இலங்கை அரசுக்கு இந்திய அரசு வழங்கி வந்த அனைத்து வித அரசியல், இராணுவ மற்றும் பிற வகை யிலான உதவிகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.
- சுயநிர்யண உரிமைக்காகப் போராடும் தேசிய இனங்கள் மீது இந்திய அரசு நடத்தி வரும் போரை இந்த அவை கடுமையாகக் கண்டிக்கிறது.

நிகழ்வில் ஈழ வரலாறை விளக்கும் குறும்படமும், தற்போது ஈழத்தில் நிலவும் சூழலை விவரிக்கும் பிரெஞ்சு தொலைக்காட்சியின் குறும்படமும் திரையிடப்பட்டன.

நிகழ்வுக்கான ஏற்பாடுகளை ஜவகர்லால் நேருப் பல்கலைக்கழக மாணவர்கள் கலையரசன், கார்த்திக், தமிழ்த்துறை மாணவர்கள், தில்லி வழக்கறிஞர்கள் பிரபு, முத்து, ஆனந்த செல்வம், மயில்சாமி உட்பட பலரும் சிறப்பாக செய்திருந்தனர்.

# பயணக் குழுவினருக்கு கரூர் பகுதிகளில் உற்சாக வரவேற்பு

*ஏப்.14 தொடங்கி மே 10 இல் நிறைவடைந்த சாதி-தீண்டாமை பரப்புரை பயணச் செய்திகள் - ஏப்.29 இதழின் தொடர்ச்சி*

25.4.2010 ஞாயிற்றுக் கிழமை 12 ஆவது நாள் திருச்சி மாவட்டத்தில் பரப்புரைப் பயணம் தொடங்கியது.

தோழர் சிற்பி இராசன் அண்ணன் மகன் திருச்சி பிரகாஷ் 5000 ரூபாய் நன்கொடை வழங்கினார்.

வரகனேரி, பாலக்கரை அண்ணாசிலை, முதலி யார் சத்திரம், சமயபுரம், மண்ணச்சநல்லூர் ஆகிய பகுதி களில் பரப்புரை செய்துவிட்டு, இலால்குடி அருகே உள்ள பூவாளூர் பொதுக் கூட்டத்திற்கு பயணக் குழு சென்றது. கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் மேற்கண்ட அனைத்து இடங்களிலும் சாதி தீண்டாமைக்கு எதிரான கருத்துகளை பேசினார். பயணத்தில் மேட்டூர் டி.கே.ஆர். இசைக்குழுவினர் பயணத்தில் இணைந்தனர். 5 நாட்கள் வந்தனர். இக்குழுவின் பறை இசையோடு பாடல்கள் பாட மக்களை மிகவும் கவர்ந்தது.

பூவாளூரில், முன்னாள் மாவட்ட செயலாளர் செகன்னாதன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் பேசுகையில் இந்தப் பகுதியில் 1000க்கும் மேற்பட்டோர் சட்ட எரிப்பு போராட் டத்தில் கலந்து கொண்டதையும், பூவாளூருக்கு அருகே உள்ள வாளாடி என்ற கிராமத்தைச் சார்ந்த பெரியசாமி, சிறையிலேயே உயிரிழந்ததையும் நினை வூட்டி, இது போன்ற சிறைக்கு செல்லும் போராட் டங்களை பெரியார் தி.க. மட்டுமே நடத்துவதை சுட்டிக்காட்டி, பரப்புரை பயணத்தின் நோக்கங்களை விளக்கினார். தொடர்ந்து தோழர் சிற்பி இராசன், மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடத்தினார். இறுதியாக முன்னாள் மாவட்ட பொருளாளர் வே. இராசு நன்றி கூறினார். இரவு உணவு தோழர் செகன்னாதன் இல்லத்தில் வழங்கப்பட்டது.

13 ஆவது நாள் : ஏப். 26 அன்று பயண வாகனம் மாற்றப்பட்டதால் காலதாமதமாக தொடங்கிய பரப்புரை விராலிமலை சந்தை அருகிலும், விராலி மலை இந்தியன் பேங்க் அருகிலும் பிரச்சாரம் செய்துவிட்டு, இரவு திருச்சி பொதுக் கூட்டத்திற்கு பயணக் குழுச் சென்றது.

திருச்சி சித்ரா விடுதி அருகில் நடைபெற்ற இப் பொதுக் கூட்டம் மேட்டூர் டி.கே.ஆர்.இசைக் குழு வின் பாடல்களோடு துவங்கியது. சிற்பி இராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சியை தொடர்ந்து மாவட்ட தலைவர் செ.த. இராசேந்திரன் தலைமை யுரை ஆற்றினார். முன்னாள் மாவட்ட பொருளாளர் இராசு வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு முத்தரையர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலப்பொதுச் செயலாளர் பாப்பாகுறிச்சி முருகேசன், திருவரங்கம் நகர பெரியார் தி.க. தலைவர் எஸ்.எஸ்.முத்து, புதியவன் ஆகியோர் உரைக்குப் பின், பசும்பொன் மக்கள் முன்னேற்ற சங்கத்தின் நிறுவனர் அல்லூர் சீனிவாசன் உரையாற்றினார். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினார். மாவட்ட செயலாளர் மு.மனோகரன் நன்றி கூறினார். இரவு உணவு தோழர் மனோகரன் வழங்கினார். தோழர் ஆர்.எஸ். மணி, லட்சுமி நர்சரிப் பள்ளியில் (அரிய மங்கலம்) பயணக் குழு இரவு தங்கியது.

**(தொடரும்)**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# முல்லைப் பெரியாறு உரிமை கோரி மே 28 இல் ஆணைகட்டியில் கழகம் மறியல்

முல்லைப் பெரியாறு அணையை உடைத்து புதிய அணை கட்டவும், பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டவும் முயற்சிக்கும் கேரள அரசைக் கண்டித்து, மே 28 அன்று ம.தி.மு.க. நடத்தும் முற்றுகைப் போராட்டத்தில் பெரியார் திராவிடர் கழகமும் பங்கேற்கும் முடிவை ஏற்கனவே அறிவித்திருந்தோம்.

கேரளத்துக்கு தமிழகத்திலிருந்து செல்லும் அத்தனைச் சாலைகளிலும் மறியல் நடக்கிறது.

இதில் கோவையிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள ஆணை கட்டி சோதனைச் சாவடி அருகே பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் முன்னிலையில் மறியலிடல் ஈடுபடுவார்கள்.

காலை 8 மணிக்கு மறியல் கிளர்ச்சி தொடங்குகிறது.

கழகத் தோழர்களே, திரண்டு வாருங்கள்!

**– பெரியார் திராவிடர் கழகம்**

போராட்டத்தில் பங்கேற்கும் வெளியூர் தோழர்கள் 28 ஆம் தேதி காலை 7 மணிக்கு முன்பே கோவை காந்திபுரம் கழகத் தலைமை நிலையத்தில் கூடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தென் மாவட்டக் கழகத் தோழர்கள் தங்கள் பகுதிக்கு அருகே நடக்கும் போராட்டங்களில் பங்கேற்கக் கோருகிறோம்.

**குறிப்பு:** போராட்டத்தை விளக்கி, மே 22, 23 தேதிகளில் தாராபுரத்திலிருந்து பொள்ளாச்சி வரை கழக சார்பில் வாகனத்தில் பரப்புரைப் பயணம் நடைபெறுகிறது.

## ‘உலக தேசிய இனங்களின் விடுதலை போராட்டங்கள்’ நூல் வெளியீடு

சென்னை எம்.ஜி.ஆர். நகர் கழகக் கூட்டத்தில் ‘உலக தேசிய இனங்களின் விடுதலை போராட்டங்கள்’ என்ற நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட இதழாளர் அய்யநாதன் பெற்றுக் கொண்டார். பாரதிதாசன் பதிப்பகம் வெளியிட்ட இந்நூலின் ஆசிரியர்கள் வி.நி. தமிழ்மாறன், வி.தமிழ்க்குமரன்.

11 நாடுகளின் விடுதலைப் போராட்ட வரலாறுகள், இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பேட்டிக்கு வந்தபோது, ஜெயேந்திரனின் காலடியில் தரையில் அமர்ந்து பேட்டி கண்டு தனது பார்ப்பன பக்தியை வெளிப்படுத்தினார்.

ஜெயலலிதாவின் அடக்குமுறையை எதிர்த்து அரசு ஊழியர்கள் போராடிய போது எந்தெந்த பகுதியில் அரசு ஊழியர்கள் யாருக்கு வாக்களிக்கப் போகிறார்கள் என்பதை ‘அம்மா’ ஆட்சி கவனிக்கும் என்று மிரட்டினார்.

தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்றத்தில் தனது முதல் பேச்சைத் தொடங்கும்போது, “சோதிடம், வாஸ்து, கடவுள், மதம் போன்ற சகலத்திலும் எனக்கு நம்பிக்கை உண்டு; இதை அங்கீரித்து வாக்களித்த மயிலாப்பூர் தொகுதி மக்களுக்கு முதல் நன்றி” என்றுதான் பேச்சையே தொடங்கினார். - இவர்தான் எஸ்.வி.சேகர்.

“அம்மா”வின் ஆணையை ஏற்று சங்கராச்சாரி மடத்துக்குப் போனதோடு சபாநாயகராக இருந்த காளிமுத்து, ஜெயேந்திரனைப் பாராட்டிய, சங்கராச்சாரியை பெரியாரோடு ஒப்பிட்டுப் பேசியபோது எதிர்த்த அதே கலைஞர்தான் இப்போது சந்தர்ப்பவாத அரசியலுக்காக எஸ்.வி. சேகரையும், நடிகவேள் ராதாவையும் ஒப்பிட்டு உள்ளம் பூரிக்கிறார். இன்னும் மார்பில் பூணூல் போட்டுக் கொண்டு தன்னை ‘பிராமணனாக’ அடையாளப்படுத்திக் கொண்டுள்ள இந்த காமெடி நடிகர் தி.மு.க.வில் சேரப் போகிறாராம். கலைஞரும் கதவைத் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறார். இப்படித்தான் அண்ணா காலத்தில் வி.பி.இராமன் என்ற பார்ப்பனர் தி.மு.க.வில் நுழைந்தார். விளைவு... கட்சிக்குள் பிளவு. சம்பத் தனிக்கட்சிக் கண்டார். எம்.ஜி.ஆர். காலத்தில் ஜெயலலிதா என்ற பார்ப்பனர் நுழைந்தார். அதன் விளைவுகளையும் தமிழகம் பார்த்தது. ஏற்கனவே பார்ப்பனியத்தை உள்வாங்கிக் கொண்டு வரும் தி.மு.க. - இப்போது பார்ப்பனர்களுக்கும் பட்டுக்கம்பள வரவேற்புதரத் தயாராகிவிட்டது.

தமிழ் செம்மொழி மாநாட்டிலும், ‘தினமணி’, ‘தினமலர்’, ‘இந்து’ குடும்பங்களுக்கு முன்னுரிமை தரப்பட்டாகிவிட்டது.

தி.மு.க.வுக்கு என்று கொள்கை அடையாளம் எதையாவது கலைஞர் மீதப்படுத்தப் போகிறாரா? குடும்பம் மட்டுமே அவரது அடையாளமாக மிஞ்சப் போகிறதா?

கலைஞரின் ‘அரசவை’யில் முன்னோடும் குழுவாக விரைந்தோடி செயல்படும் ‘மூவர் அணி’ - இதைப் பற்றி எல்லாம் அவசரக் கூட்டங்களைக் கூட்டிப் பேச மாட்டார்களோ!

# மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்துக்கு அனுமதி மறுத்தது காகபுதூர் காவல்துறை

ஆனைமலை ஒன்றியம் காகபுதூரில் கடந்த மே 2 ஆம் நாளன்று மூடநம்பிக்கை ஒழிப்பு பேரணி, பொதுக் கூட்டம் நடத்த காவல்துறை அனுமதி மறுத்துவிட்டது. தீச்சட்டி எடுப்பதும் தீமிதித்துக் காட்டுவதும் இந்துக்களின் மத உணர்வுகளைக் கொச்சைப்படுத்துகிற நிகழ்வுகளென்றும் இதனால் இந்து இயக்கங்கள் இதற்கு எதிர் நடவடிக்கையில் ஈடுபடுவார்களென்றும் அப்போது சட்டம் ஒழுங்கு கெடும் என்றும் ராமகோபாலனின் குரலில் பேசி அனுமதி மறுத்தார் ஆனைமலைக் காவல் துணைக் கண்காணப்பாளர் மாடசாமி.

பகுத்தறிவுப் பிரச்சாரங்களை தடுத்து இந்துத்துவ குரலாய் ஒலித்த தமிழக அரசின் காவல்துறையைக் கண்டித்துமே 6 ஆம் நாள் காகபுதூரில் கண்டனக் கூட்டத்திற்கு அனுமதி கேட்கப்பட்டது. பல்வேறு அலைக்கழிப்புகள், நிபந்தனைகளுக்குப்பின் கூட்டத்திற்கு அனுமதி வழங்கிய காவல்துறை அந்த சின்னஞ்சிறிய கிராமத்திற்குள் ஏராளமான காவலர்களைப் போட்டு பரபரப்பாக்கியது. மேலும் கழகத்தின் தலைவர், பொதுச் செயலாளர்களோ அல்லாமல் உள்ளூர் அளவில் தோழர்கள் பங்கேற்ற கூட்டத்திற்கு சுருக்கெழுத்தர்கள், ஒலி, ஒளிப்பதிவுகள்என ஏகத்திற்கு அலட்டிக் கொண்டது காவல்துறை.

கண்டன உரையாற்றிய தோழர்கள் இரா. மோகன், சி. விசயராகவன், வே. வெள்ளிங்கிரி, கா.சு.நாகராசன், கோவை நாகராசு, மு. சம்பத் ஆகிய அனைவருமே காவல்துறை இந்துத்துவமயமாகிவிட்டதை சுட்டிக் காட்டினர்.

காகபுதூர் கிராமத்தைப் பொறுத்தவரை மக்களின் அனைத்துத் தேவைகளுக்காகவும் உடனடியாக களம் இறங்கிப் போராடுகிற ஒரே இயக்கமாக, ஒட்டு மொத்த மக்களின் ஆதரவைப் பெற்ற அமைப்பாக பெரியார் திராவிடர் கழகம் விளங்குகிறது. கோவில் நிர்வாகிகளே கழகக் கூட்டங்களுக்கு நிதியளித்து ஆதரவு தருகிற அந்த கிராமத்தில் காவல்துறை தேவையற்ற வார்த்தைகளால் பிளவு உண்டாக்க முயன்றது. மூட நம்பிக்கை ஒழிப்புப் பேரணிக்கு தடை விதித்த காவல்துறையைக் கண்டித்து நடந்த பொதுக் கூட்டத்தின் மொத்த செலவையும் பொது மக்களே ஏற்றுக் கொண்டு நிகழ்ச்சியிலும் பெருந்திரளாய் பங்கேற்று இறுதி வரை இருந்து உரைகளைக் கேட்டனர்.

பகுத்தறிவுப் பிரச்சாரங்களைத் தடுக்கும் காவல்துறை காவல் நிலையங்களில் இந்துமதப் பண்டிகையான ஆயுத பூஜை நடத்தும்போது காவல்நிலையங்களை முற்றுகையிடுவோம் என்று கூட்டத்தில் பேசிய தோழர் காசு. நாகராசன் எச்சரித்தார். நிகழ்ச்சிக்கு பழ. மாரிமுத்து தலைமை தாங்கினார். த. மணி நன்றி கூறினார்.

# கலைஞர் நடத்திய உண்ணாவிரதம் நாடகம் அம்பலம்

ஈழத்தில் - இனப்படுகொலை உச்சகட்டத்தில் நடந்தபோது திடீரென்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி போர் நிறுத்தம் கோரி உண்ணாவிரதம் இருந்தார். 4 மணி நேரத்தில் உண்ணாவிரத நாடகத்தை முடித்துக் கொண்டார். அந்த உண்ணாவிரதம் சிறிலங்கா அரசுடன், ஏற்கனவே பேசிக் கொண்டு நடத்திய நாடகம் என்ற உண்மை இப்போது அம்பலமாகியுள்ளது.இதன் பின்னணி சதியை இலங்கை பாதுகாப்புத் துறை செயலாளரும், ராஜபக்சேயின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்சே போட்டு உடைத்துள்ளார்.

இது தொடாபாக “Indian Defence Review” சஞ்சிகைக்கு அளித்துள்ள பேட்டியில் கோத்தபாய ராஜபக்சே கூறியிருப்பதாவது:

கடந்த வருடம் ஏப்ரல் 24 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதி உடனடிப் போர் நிறுத்தம் வேண்டி சென்னையிலுள்ள அண்ணா சமாதியில் உண்ணாவிரதம் இருந்தார். இச்சம்பவம் நடப்பதுற்கு முதல் நாள் மாலை 4 மணிக்கு இந்திய வெளியுறவுச் துறைச் செயலர் சிவசங்கர மேனன் என்னை அவசரமாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். இந்தியத் தூதுக்குழு ஒன்று அவசரமாக கொழும்பு வரவிருப்பதாகத் தெரிவித்தார்.


நான் உடனடியாகவே ஜனாதிபதி ராஜபக்சேயின் அலுவலகத்திற்குச் சென்று அவரின் அனுமதியைப் பெற்று 5 நிமிடத்திற்குள்ளாகவே மீண்டும் மேனனைத் தொடர்பு கொண்டேன். கருணாநிதி உண்ணாவிரதத்தைத் தொடங்கி ஆறுமணி நேரத்திற்குள் நாம் யுத்த தவிர்ப்பு பிரதேசத்திற்குள் ஷெல் தாக்குதல்கள் உள்பட சகல தாக்குதல்களையும் நிறுத்துவதாக அறிக்கையை வெளியிட்டோம். இந்த அறிக்கையைத் தொடர்ந்து கருணாநிதியின் உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது. இதன் மூலம் தமிழ்நாட்டிலிருந்து எழுந்திருக்கக்கூடிய பெரிய ஆபத்தை நாம் தவிர்த்துக் கொண்டோம்.

இந்தியா - இலங்கை அதிகாரிகள் குழுவாக மேற்கொண்ட ராஜதந்திர நடவடிக்கையின் ஒரு சிறந்த உதாரணமாக இது உள்ளது என்று கூறியுள்ளார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 20th May 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2041 மே 27, 2010 புரட்சி 9 முழக்கம் 20 விலை: ரூ.2.50

### பெரியாரியலை நோக்கி புதிய இளைஞர்கள்

## இளம்பிள்ளை பயிற்சி முகாம் மாட்சி



சேலம் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் பெரியாரியல் பயிற்சி முகாம் மே 22, 23 தேதிகளில் இளம்பிள்ளையில் இடங்கணசாலை பேரூராட்சி மண்டபத்தில் சிறப்புடன் நடந்தது. முகாமை பெரியார் கொள்கையில் மிகவும் ஈடுபாடு கொண்டவரும், இளம்பிள்ளை நகர முன்னாள் தி.மு.க. செயலாளருமான ர.வீரிசெட்டி தொடங்கி வைத்துப் பேசினார்.

முதல் வகுப்பாக - பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், ‘பெரியாரின் இன்றையத் தேவை’ எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். தேனீர் இடைவேளையைத் தொடர்ந்து, மருத்துவர் எழிலன் சோதிட மோசடிகள் மற்றும் மனிதனின் பரிணாம வளர்ச்சி, உலகின் தோற்றம் பற்றி ஒளிப்படங் களுடன் விரிவாக விளக்கினார். மதிய உணவுக்குப் பிறகு சிற்பிராசன் இதிகாசங்கள், புராணங்கள் எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். மாலை 5 மணியிலிருந்து 8 மணி வரை கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பெரியார் நடத்திய போராட்டங்களின் வரலாறு களை விளக்கிப் பேசினார். இரவு 8 மணியளவில் உணவுக்குப் பிறகு குறும்படங்கள் திரையிடப் பட்டன.

மே 23 ஆம் தேதி காலை 9 மணியளவில் இரண்டாம் நாள் வகுப்புகள், சிற்பி ராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சியுடன் தொடங்கியது. “பெரியார் திராவிடர் கழகம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்” எனும் தலைப்பில் விடுதலை இராசேந்திரன் - விரிவாக கழக அமைப்பில் உருவாக்கப்பட வேண்டிய பண்புகள், பெரியார் இயக்கத்தின் தனித்துவமான பண்புகள், இயக்கத்தை வளர்த்தெடுக்க, பின்பற்ற வேண்டிய அணுகு முறைகள், அரசியல் கட்சிகளை கழகத் தோழர்கள் கையாள வேண்டிய அணுகுமுறைகள் குறித்து விரிவாக பேசினார். தேனீர் இடைவேளைக்குப் பிறகு கழகத் தலைவர் கொளத்தூர் மணி ‘கடவுள்’ எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். மதிய உணவைத் தொடர்ந்து பேராசிரியர் சரசுவதி - பெரியாரும் பெண்ணுரிமையும் எனும் தலைப்பில் வகுப்பு எடுத்தார். தேனீர் இடைவேளையைத் தொடர்ந்து, தோழர்கள் எழுப்பிய அய்ய வினாக்களுக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலை இராசேந்திரன் ஆகியோர் விளக்கமளித்தனர்.

உதை குத்துச் சண்டைப் (Kick boxing) பயிற்சியாளர் சிவபெருமாள் மற்றும், அவரிடம் பயிற்சி பெறும் மாணவ மாணவிகள், உதைக்குத்து சண்டை வீர விளையாட்டு நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டினர். அவர்களுக்கு பதக்கங்களை, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பேராசிரியர் சரசுவதி ஆகியோரும்; சான்றிதழ்களை - விடுதலை இராசேந்திரனும் வழங்கினர். இந்த மாணவ மாணவியர் தங்களது பயிற்சி ஆசிரியருடன் இரண்டு நாள் பயிற்சியிலும் பங்கேற்று, கருத்துகளைக் கேட்டனர். இரண்டு நாள் பயிற்சியிலும் தாங்கள், கடவுள் மறுப்பாளராக மாறி விட்டதாக அவர்கள் பெருமையுடன் கூறினர்.

### பயிற்சி முகாம் வெற்றிக்கு உழைத்த தோழர்கள்

சேலம் மாவட்ட துணை செயலாளர் முத்து மாணிக்கம், மாவட்ட இளைஞரணி செயலாளர் கோகுல கண்ணன், இளம்பிள்ளைப் பகுதி கழகச் செயல்வீரர்கள் சவுந்தர், மூர்த்தி, பார்த்திபன், சண்முகம், நங்கவல்லி கிருட்டிணன், தமிழ்மணி, பிரபாகரன், கிருட்டிணன், சந்திரேசகர், காவேரி செல்வம், பிரகாஷ், கார்த்தி ஆகியோர் பயிற்சி முகாம் வெற்றிக்கு உழைத்தார்கள். சென்னை கழகத் தோழர்கள் சுகுமாறன், ஜான் ஆகியோர் பயிற்சி முகாமில் பங்கேற்று, உணவு வழங்கும் பொறுப்புகளை ஏற்று செயல்பட்டனர்.

### பெண்கள் பங்கேற்ற உதை குத்துச் சண்டை

முகாமின் இரண்டாம் நாள் தோழர் சிவபெருமாள் அவர்களிடம் உதை குத்துச் சண்டை பயிற்சி பெறும் இளம் பெண்களும், ஆண்களும் நடத்திக் காட்டிய நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்தது. கால்களை மட்டுமே பயன்படுத்தி உதைத்து, எதிரிகளை வீழ்த்துவது இந்தக் கலையின் தனிச் சிறப்பாகும்.

உண்மையான சண்டைக் களமாகவே நிகழ்ச்சி நடந்தது. ஒருபெண் தனித்து நின்று மூன்று ஆண்களை உதை குத்துச் சண்டை வழியாக துணிவுடன் எதிர்கொண்டது பெண்களின் வீரத்தைப் பறைசாற்றியது.

சேலம் மாவட்டக் கழக சார்பில் பயிற்சி முகாம் நடத்துவது குறித்து மாவட்டக் கலந்துரையாடலில் ஆலோசிக்கப்பட்டபோது, இளம்பிள்ளைப் பகுதி, கழகத் தோழர்கள், தங்கள் ஊரில் பயிற்சி முகாமை நடத்த முன் வந்ததோடு, பயிற்சி முகாமுக்கான முழு செலவையும் தாங்களே ஏற்பதாக தெரிவித்தனர். அறிவித்தவாறு, பயிற்சி முகாமை சிறப்பாக நடத்திக் காட்டியுள்ளனர். இந்தப் பயிற்சி முகாம் புதிய தோழர்களுக்காக மட்டுமே நடத்தப்பட்டதாகும். எனவே ஏற்கனவே கழகத்தில் செயலாற்றி வரும் தோழர்கள் பங்கேற்கவில்லை. 140 தோழர்கள் முகாமில் பங்கேற்றனர். இதில் 30 பேர் பெண்கள்; இளம் வயதுத் தோழர்கள் மிகவும் ஆர்வமாக முகாமில் பங்கேற்று, கருத்துகளைக் கேட்டதோடு, வகுப்பில் நடத்தப்பட்ட பாடங்களையும் குறிப் பெடுத்துக் கொண்டு கேள்விகளையும் கேட்டது, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. குறிப்பாக - பெண்கள், பயிற்சியில் நடத்தப்பட்ட பாடங்களை மிகவும் கவனமாகக் கேட்டு குறிப்புகளை எழுதியது சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும். வகுப்புகளைத் தொடர்ந்து கேள்விகள் கேட்கப் பட்டன. சரியாக விடையளித்த மாணவர், மாணவியருக்கு, தோழர் சிற்பிராசன் கழகம் வெளியிட்ட நூல்களைப் பரிசுகளாக வழங்கினார்.

சில மாதங்களுக்கு முன் திராவிடர் கழகத்தி லிருந்து விலகி, பெரியார் திராவிடர் கழகத்தில் இணைத்துக் கொண்ட தோழர் ஆத்தூர் மகேந்திரன், தனது பகுதியிலிருந்து 10 தோழர்களை முகாமுக்கு அழைத்து வந்திருந்தார். பயிற்சி முகாம் நடந்த மண்டபம் முழுதும் சுற்றுச் சுவர்களில் பெரியாரின் கருத்துகள் ஒளி அச்சில் வைக்கப்பட்டிருந்தது மிகச் சிறப்பான ஏற்பாடாகும்.

பயிற்சியாளர்களுக்கு, ‘புராணங்கள் - வரலாறுகளில் பார்ப்பனர் சூழ்ச்சிகளும் படுகொலைகளும்’, ‘பார்ப்பனர்கள் - பார்ப்பனியம் - திராவிடர் - திராவிடம் - தமிழ்த் தேசியம்’ ஆகிய தலைப்புகளில் பல்வேறு சேதிகள் தொகுக்கப்பட்டு, பயிற்சிக் கையேடாக வழங்கப்பட்டது. பெரியாரியலை நோக்கி வரும் புதிய இளம் தலைமுறைக்கு பெரியாரியலை அறிமுகப்படுத்திய சிறப்புடன் முகாம் மாலை 7 மணியளவில் நிறைவடைந்தது.

**– நமது செய்தியாளர்**

**(மேலும் படங்கள் 4 ஆம் பக்கத்தில்)**

**தலையங்கம்**

# செயற்கை உயிர்

மகத்தான கண்டுபிடிப்பு ஒன்றை விஞ்ஞானிகள் உலகுக்கு வழங்கியுள்ளனர். ஆம்; உயிர் அணுக்களை விஞ்ஞானிகளே செயற்கையாக உருவாக்கிவிட்டனர். வேதியப் பொருள்களால் உயிரை உருவாக்க முடியும் என்ற இந்த மகத்தான சாதனை - விஞ்ஞான கண்டுபிடிப்புகளிலேயே மகுடமாகும். அமெரிக்காவின் புகழ் பெற்ற உயிரியல் விஞ்ஞானி கிரெய்க் வென்டர் (Craig ventor) தலைமையில் செயல்பட்ட 24 விஞ்ஞானிகள் அடங்கிய குழு, இந்த சாதனையை செய்து முடித்துள்ளது. இதில் மூன்று விஞ்ஞானிகள், இந்தியாவைச் சார்ந்தவர்கள். இதில் பெங்களூரைச் சார்ந்த இராதாகிருஷ்ண குமாரி என்ற இளம் பெண் விஞ்ஞானியும் ஒருவர். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் உயிர் நுண்ணியலில் உயர் பட்டப்படிப்பை முடித்து, இப்போது இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ள அமெரிக்காவின் ஜெ கிரயக் வென்டர் நிறுவனத்தில் ஆய்வாளராக பணியாற்றுகிறார். இந்த உயிர் செல், முழுமையாக இரசாயனப் பொருள்களைக் கொண்டே செயற்கையாக உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகம் முழுதுமிருந்தும் விஞ்ஞானிகள் இந்த கண்டுபிடிப்பை உற்சாகத்துடன் வரவேற்றுள்ளனர். மதவாதிகளை இந்த கண்டு பிடிப்பு அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அதன் காரணமாக அமெரிக்க அதிபர் ஒபாமா, மிகவும் அடக்கி வாசித்துள்ளார். அரசு இதுபற்றி விரிவாக ஆராய்ந்து 6 மாதத்தில் கருத்து தெரிவிக்கும் என்கிறார் ஒபாமா!

ரோமில் உள்ள கத்தோலிக்க மத நிறுவனத்தின் அதிகாரிகள், இந்தக் கண்டுபிடிப்பு வெளியான உடனே, கடந்த வெள்ளிக் கிழமை கருத்து தெரிவிக்கையில் இந்தக் கண்டுபிடிப்பை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும் என்று, விஞ்ஞானிகளை எச்சரித்துள்ளனர்.

“உயிரைக் கடவுள்தான் தர முடியும்” என்று ரோம் கத்தோலிக்க நிறுவனத்தின் உயர் அதிகாரி ஒருவர், ‘ஏபிடி’ தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். கடவுளால் மட்டுமே உருவாக்கப்படக் கூடிய உயிர், அமெரிக்காவின் ஒரு சோதனைச் சாலையில் உண்டாக்கப்பட்டுவிட்டதற்கு இவர்களிடம் பதில் இல்லை. “கண்டுபிடிப்பை வரவேற்கிறோம்; ஆனால், இந்தக் கண்டுபிடிப்பு மனித வாழ்க்கையின் கவுரவத்துக்கும், மாண்புக்கும் எதிராகப் பயன்படுத்தக் கூடாது” என்று அந்த விஞ்ஞானிகள் புலம்பியுள்ளனர்.

மனிதனின் உடலிலுள்ள மரபணுக்களைப் பயன்படுத்தி, ஏற்கனவே உயிர் உண்டாக்கும் கண்டுபிடிப்புகளை விஞ்ஞானிகள் நிகழ்த்தியபோது, உயிரைத் தனியாக உண்டாக்க முடியாது. அது கடவுளால்தான் முடியும் என்று மதவாதிகள் கூறி வந்தனர். இப்போது சோதனைச் சாலையில் செயற்கையாகவே ‘உயிர் செல்’ கண்டுபிடிக்கப்பட்டதற்கு, இவர்கள் என்ன சமாதானம் கூறப் போகிறார்கள்?

குளோனிங் முறை மூலம் ஒரு மனிதனை அப்படியே மறு உருவாக்கம் செய்ய முடியும் என்று விஞ்ஞானிகள் கண்டறிந்தாலும், அமெரிக்கா, அந்த சோதனைகளைத் தடை செய்துள்ளது. மனித சமூகத்தில் இது குழப்பங்களை உருவாக்கி விடும் என்று அரசுகள் அஞ்சுகின்றன.

புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் மனித வாழ்க்கைக்கான அர்த்தங்களையே மாற்றி வருகிறது. சமூக உறவுகள் இந்தப் புதிய கண்டுபிடிப்புகளால், மாற்றத்துக்கு உள்ளாகி வருகின்றன. கடந்த மே 24 ஆம்தேதி வெளிவந்த ஒரு செய்தியை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். புதுடில்லியில் ஒரு தாய், தனது மகளின் கருவை, தனது வயிற்றில் சுமந்து வருகிறார். சோபனாவின் மகள் பாவிக்காவுக்கு 26 வயதாகிறது. பிறக்கும் போதே, பாவிக்காவுக்கு, கருப்பை இல்லை. இது தெரிந்தும், அவரது காதலர், அந்தப் பெண்ணை மணம் முடிக்க முன் வந்தார். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு செயற்கைக் கருத்தரிப்பின் மூலம் வாடகைத் தாய் வழியாக குழந்தை பெற்றுக் கொள்ள இந்த இணையர் முடிவு செய்தனர். ஆனால், வாடகைத் தாயை அவர்களால் கண்டறிய முடியவில்லை. கருவை வயிற்றில் வளர்த்து, குழந்தையை பிரசவித்துத் தரும் வாடகைத் தாயார்கள் மிக அதிகத் தொகையைக் கேட்டார்கள். மகளின் துயரத்தைப் போக்க அவரது தாயார் சோபனாவே முன் வந்தார். இப்போது சோபனாவின் வயிற்றில் வளர்வது ஒரு குழந்தை மட்டும் அல்ல; மூன்று குழந்தைகள். விரைவில் மகளுக்காக, தாய் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுக்கப் போகிறார். மகளை ஈன்றெடுத்தவரே மகளுக்காக அவரின் குழந்தைகளையும் பிரசவிக்கப் போகிறார். இதைத் தனது மகளுக்குத் தரும் உயர்ந்த பரிசு என்று, உளம் பூரிக்கிறார் சோபனா.

விஞ்ஞானம் இப்படி வளர்ந்தாலும் இந்த நாட்டில் மூடத்தனம், பரப்பப்பட்டுக் கொண்டே வருகிறது. பிரம்மா தான் உயிரைப் படைக்கிறார்; பிள்ளை இல்லாதவர்கள் குழந்தைகள் பெற சிறப்பு பூசை செய்ய வேண்டும். தோஷம் கழிக்க வேண்டும்; காசி, ராமேசுவரம் போக வேண்டும்; அரச மரத்தை சுற்றி வர வேண்டும். சோதிடத்தில் பிள்ளை ராசி இல்லை என்றெல்லாம் மூட நம்பிக்கைகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். செயற்கை உயிர்களைக் கொண்டு மனிதர்களை உருவாக்க விஞ்ஞானம் வந்து விட்டது. ஆனால், ஒன்றை மட்டும் விஞ்ஞானிகளால் நிறைவேற்றவே முடியாது. அதுதான் கடவுளுக்கு உயிர் கொடுக்கும் முயற்சி; இல்லாத ஒன்றுக்கு எப்படி உயிர் கொடுக்க முடியும்?

# அரசு ஊழியர் ஆனாலும் முடிவெட்ட உரிமையில்லை

***ஏப்ரல் 14 இல் தொடங்கி மே 10 இல் நிறைவடைந்த கழக சார்பில் நடந்த சாதி – தீண்டாமை ஒழிப்புப் பரப்புரைப் பயணச் செய்திகளின் தொகுப்பு.***

*14 ஆவது நாள் ஏப்ரல் 27 அன்று* திருச்சி ஏ-1 உணவகம் சார்பாக பயண நிதி 2000 ரூபாய் வழங்கினர். பயணக் குழு கரூர் மாவட்டத்தை நோக்கி புறப்பட்டது. தோழர் திருச்சி குமார் இரண்டு நாட்களுக்கு தேவையான குடிநீரை கொடுத்து வழியனுப்பினார்.

கரூர் தோகைமலை அருகிலுள்ள தெலுங்கப் பட்டியில் தோழர் கு. ராஜா இல்லத்தில் உணவு முடித்து, தோகை மலை, கொசூர், தரகம்பட்டி ஆகிய பகுதிகளில் குழு பரப்புரையை தொடர்ந்தது. தரகம்பட்டியில் நாம் தமிழர் அமைப்பைச் சார்ந்த வி. திலகர் குளிர்பானம் வழங்கினார். கழகத் தோழர் கரூர் மாவட்ட செயலாளர் (மூக்கனாங் குறிச்சியில்) முருகேசன் இல்லத்தில் மதிய உணவு வழங்கப் பட்டது. மாலை கே.பி. தாழைப்பட்டி என்ற ஊரில், பெரியார் பெருந் தொண்டர்களான வீ. ராஜ மாணிக்கம், ரத்தினவேல், ராஜசுந்தரம் ஆகியோர் தேனீர் வழங்கி, சிறிது நேரம் பயணக் குழுவோடு உரையாடினர். இவ்வளவு வயதான பிறகும் பெரியார் கொள்கையில் உறுதியோடு இருந்து, இந்தப் பகுதியில் விவசாயி களுக்கான உரிமைக்காக போராடி வருவதாகவும், மிக விரைவில் இந்தப் பகுதியில் பெரியார் சிலை அமைக்கப் போவதாகவும் கூறினர். அடுத்து, வெள்ளியணை, தாந்தோன்றி மலை, ராயனூர் ஆகிய பகுதிகளில் பரப்புரை நடை பெற்றது. பிற்பகலுக்குப் பிறகு கோவை மாவட்ட கழகத் தோழர்கள் திருப்பூர் துரைசாமி, அகிலன், முகில்ராஜ் ஆகியோர் இணைந்து கொண்டனர்.

கோவை மாவட்ட தலைவர் திருப்பூர் துரைசாமி ரூ.2500-ம், அகிலன் ரூ.2500-ம் பயண நிதியாக வழங்கினர். ராயனூரை சார்ந்த கழக ஆதரவாளர் விதண்டபாணி இரவு உணவிற்காக ரூ.500 வழங்கி, பெரியார் தி.க.வின் நிகழ்ச்சிகளுக்கு நன்கொடை கேட்டு எப்பொழுதும் தொடர்பு கொள்ளலாம் என முகவரி கொடுத்துச் சென்றார்.

*15 ஆவது நாள் ஏப். 28 அன்று* தொழில்பேட்டை, பசுபதிபாளையம், 5 ரோடு, கரூர் பேருந்து நிலையம் அருகில், வெங்கமேடு, எம்.ஜி.ஆர். சிலை, வேலாயுதம் பாளையம் ஆகிய பகுதிகளில் பரப்புரை நடைபெற்றது. பசுபதி பாளையத்தில் மதி.மு.க.வைச் சார்ந்த பா.சி. தங்கராசு வாழ்த்துரை வழங்கினார். எம். ராமதாஸ் மோர் வழங்கினார். வெங்கமேடு பகுதி காங்கிரஸ் பொறுப்பாளர் காமராஜ் தேனீர் வழங்கினார். வேலாயுதம் பாளையம் தோழர்களான செல்வம், முருகேசன் ஆகியோர் உணவு வழங்கினர். மேட்டூரைச் சார்ந்த சவுதி பாபு, புலியூரிலுள்ள தனது இல்லத்தில் தங்க வைத்து மூன்று வேளை உணவும் வழங்கினார். பரப்புரையைப் பற்றி உள்ளூர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப் பட்டது. பரப்புரை பயணத்தை வழியில் காரில் வந்த சமூக நல ஆர்வலரும் முன்னாள் சைதை சட்டமன்ற உறுப்பினருமான சைதை துரைசாமி தோழர் களைப் பாராட்டி ரூ.2000 நன்கொடை வழங்கினார்.

*16 ஆவது நாள் - ஏப்.29 அன்று* புலியூரில் பரப்புரை தொடங்கியது. பெரியார் பெருந்தொண்டர்கள் குப்புசாமி (தி.க.), கிருட்டிணன் (தி.க.) ஆகியோர் தேநீர் வழங்கி பயணக் குழுவை பாராட்டினர். மதி.மு.க. நகரச் செயலாளர் தென்றல் ரூ.50 வழங்கினார். கிருஷ்ணராயபுரம் செல்லும் வழியில் “பெண்கள் முன்னணி” மாநில தலைவர் கிரூஸ்டினா அவர்களை பயணக்குழு சந்தித்தது. எந்த முறையில் பரப்புரை நடைபெறுகிறது என்பதை கேட்டறிந்து, பயணக்குழுவிற்கு பாராட்டுகளை தெரிவித்தார். கிருஷ்ணராயபுரத்தில் பரப்புரை செய்து, பழைய ஜெயங் கொண்டம் சென்றடைந்தது. அப்பகுதி யின் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எம்.வேலு வரவேற்று மதிய உணவு வழங்கினார். சிறிது நேர ஓய்வுக்குப் பின் இந்தப் பகுதியிலுள்ள சந்தை அருகே சிற்பி இராசன் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இந்தப் பகுதியில் டாஸ்மார்க் கடையில் விற்பனையாளராகப் பணிபுரியும் கந்தையா, அரசியல் ஊழியராக இருந்தும் கூட, தாழ்த்தப்பட்டவர் என்ற காரணத்திற்காக இந்தப் பகுதியிலுள்ள முடி திருத்தகங்களில் அனுமதி மறுக்கப் படுவதை தெரிவித்தார்.

அடுத்து குளித்தலையில் இரண்டு இடங்களில் பரப்புரைச் செய்து, தோழர் தமிழ் நெஞ்சன் வழங்கிய உணவிற்கு பிறகு பயணக்குழு பெரம்பலூர் மாவட்டத்தை நோக்கி பயணித்தது. கரூர் மாவட்ட தலைவர் தனபால், இராஜா ஆகியோர் கரூர் மாவட்டத்தில் பயணக் குழுவோடு உடனிருந்து ஏற்பாடுகளை செய்தனர்.

*17 ஆவது நாள் - பெரம்பலூர் மாவட்டம் - ஏப்ரல் 30 அன்று* அம்மா பாளையத்தில் துவங்கியது. தூத்துக்குடி பால். பிரபாகரன் பயணக்குழுவில் இணைந்தார். தி.மு.க.வைச் சார்ந்த இலாடபுரம் கவுன்சிலர் மாசிலாமணி காலை உணவு வழங்கினார். சட்ட எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட தோழர் பி. ராமசாமி, இந்தப் பகுதியில் கலந்து கொண்டார். துறையூர் பேருந்து நிலையம், பாலக்கரை துறையூர் ஆகிய பகுதிகளில் பரப்புரை செய்து, ஓவியர் இளங்கோவன் இல்லத்தில் உணவு உண்டு சிறிது நேர ஓய்வுக்குப் பிறகு மேலபுலியூரில் இரண்டு இடங்களிலும், இலாடபுரம் என்ற ஊரிலும் பரப்புரை நடத்தப்பட்டது.

மேலபுலியூரில் புதிய தோழரான செந்தில் குமார் தலைமையில் 10க்கும் மேற்பட்ட தோழர்கள் கழகத்தில் இணைந்தனர். இந்தப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கொடிக் கம்பத்தில் தூத்துக்குடி மாவட்ட பொறுப்பாளர் பால். பிரபாகரன் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

இந்தப் பகுதியைச் சார்ந்த செல்லம்மாள், கருப்பாயி, முத்துலட்சுமி ஆகியோர் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற காரணத்திற்காக எங்களை கோவிலில் அனுமதிக்க மறுக்கிறார்கள் என்று கூறினர். அனைவரும் சமம் என்று பரப்புரை செய்வதை பார்த்து, பெண்களான நாங்களும் உங்கள் கழகத்தில் இணையலாமா? என்று கேட்டு, கழகத்தில் இணைந்து போராட தயார் என்று உணர்வுடன் கூறினர். இரவு இலாடபுரம் சுந்தரராஜ் உணவு வழங்கினார்.

**செய்தி: கோகுல கண்ணன்**

**(தொடரும்)**

## புலிகள் ஊடுருவல் என்று புலம்பும் இந்திய ஆட்சியே!

# இதோ, இந்த இன அழிப்புக் கொடூரங்களுக்கு பதில் என்ன?

***தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் ஊடுருவி விட்டார்கள் என்று, இந்தியப் பார்ப்பன ஆட்சி, இப்போதும் பழைய கூப்பாட்டைப் போடுகிறதே தவிர, அங்கு நடத்தி முடிக்கப்பட்ட இனப்படுகொலை பற்றி வாய் திறக்கவில்லை. விடுதலைப்புலிகளை ஒழிந்து விட்டோம் என்று வெற்றி விழா கொண்டாடும் சிங்கள அரசு தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு எந்த ஒரு திட்டத்தையும் முன் வைக்கவில்லை. இந்தியப் பார்ப்பன ஆட்சியும், இதைக் கேட்கத் தயாராக இல்லை. ஈழத்தில் தமிழினம் எப்படி கொடூரமாக அழிக்கப்பட்டது என்ற உண்மைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. 'மனித உரிமைகளுக்கான யாழ்ப்பான பல்கலைக்கழக ஆசிரியர்கள்' என்ற அமைப்பு 2008 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து 2009 மே 18 ஆம் தேதி வரை நடந்த நிகழ்வுகளை விரிவாகத் தொகுத்து ஆவணமாக்கி யிருக்கிறது. இந்த அமைப்பு விடுதலைப் புலிகள் இயக் கத்தை விமர்சிக்கும் அமைப்புதான் அந்த ஆவணத்தில் படுகொலைகளை நேரில் பார்த்தவர்களின் நேரடி சாட்சியங்கள் பதிவாகியுள்ளன. அதில் ஒருவரின் சாட்சியம் மட்டும் இங்கே வெளியிடப் படுகிறது.***

***'உயிர்மை' இதழில் (மே 2010) ரவிக்குமார் இதைச் சுட்டிக்காட்டி எழுதியுள்ள அப்பகுதியை அதன் முக்கியத்துவம் கருதி இங்கு வெளியிடுகிறோம்.***

கிளிநொச்சி வீழ்ந்ததற்குப் பிறகு மக்களெல்லாம் ஒருவரோடு ஒருவர் தொடர்பிழந்து கிழக்கு திசையை நோக்கி ஓட ஆரம்பித்திருந்தார்கள். 2009 ஜனவரி மாத மத்தியில் நான் மோட்டார் சைக்கிள் ஒன்றில் விசுவ மடுவுக்குக் கிழக்கால் எனது நண்பர் ஒருவரைத்தேடிச் சென்று கொண்டிருந்தேன். ஒரு வீட்டின் முன்புறம் நாற்காலி ஒன்றில் ஒருத்தர் உட்கார்ந்திருந்தார். அவருடைய மனைவிக்கு சுமார் நாற்பத்தைந்து வயதிருக்கும். அருகில் அவர் சமைத்துக் கொண டிருந்தார். பக்கத்தில் இரண்டு இளம் பெண்கள் அமர்ந்திருந்தார்கள். எனது நண்பரின் முகவரியைச் சொல்லி அந்த ஆளிடம் விசாரித்தபோது, சுமார் ஐம்பது பேர் கூடியிருந்த ஒரு இடத்தை அவர் சுட்டிக் காட்டினார். அங்கே போவதற்காக நான் எனது மோட்டார் சைக்கிளை 'ஸ்டார்ட்' செய்தேன். மோட்டார் சைக்கிளுக்கு மண்ணெண்ணையைத் தான் எரிபொருளாகப் பயன்படுத்தி வந்தேன் என்ப தால் அது ஸ்டார்ட் ஆகாமல் மக்கர் பண்ணியது. அந்த சமயத்தில் ஏதோ ஒரு சத்தம். உள்ளுணர்வின் தூண்டுதலால் அது ஒரு குண்டு என்பதைப் புரிந்து கொண்டு நான் சடாரென்று தாவி பக்கத்திலிருந்த குழிக்குள் விழுந்தேன். அருகில் பெரிய வெடிச்சத்தம் கேட்டது. சில நிமிடங்கள் கழித்துத் தலையை உயர்த்திப் பார்த்தேன். எனக்கு வழி சொன்ன ஆளின் கால்களுக்கிடையேதான் குண்டு விழுந்திருந்தது. அந்த ஆளைக் காணவில்லை. அருகில் அமர்ந்திருந்த இரண்டு பெண்களும் இறந்து கிடந்தார்கள். சமைத்துக் கொண்டிருந்த பெண்மணி வலியில் அலறிக் கொண்டிருந்தார். அவரது கால்கள் இரண்டும் குண்டு வெடித்ததில் பிய்த்துக் கொண்டு போயிருந்தது. அவருடைய ரத்தம் அடுப்பிலிருந்த குழம்பில் சிந்திக் கிடந்தது. அவருடைய கறியும் அந்தக் குழம்போடு சேர்ந்து கலந்து கிடந்தது. 'என்னை விட்டுவிட்டுப் போகாதே. ஹாஸ்பிட்டலுக்குக் கொண்டுபோ' என்ற அந்தப் பெண்மணி என்னிடம் கெஞ்சினார். நான் அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லத்தான் விரும்பினேன். ஆனால் அருகாமையில் மருத்து வமனை எதுவும் இல்லை. என்னால் முடிந்ததெல்லாம் அவர் அருகில் கொஞ்ச நேரம் நின்றதுதான். அதற்குள் அவருடைய உயிர் பிரிந்து விட்டது.

நான் இரணபாலையில் உள்ள தேவலாயத்துக்குச் சென்றேன். அங்கு சிங்கள ராணுவத்தின் கிஃபிர் விமானங்கள் குண்டு வீசின. நான் ஒரு பங்கருக்குள் ஒளிந்து கொண்டேன். பதினைந்து அடிக்கு அப்பால் ஆயிரம் கிலோ எடை கொண்ட குண்டு ஒன்றை சிங்கள விமானம் வீசிவிட்டுப் போனது. அந்தக் குண்டு பூமியில் பெரிய பள்ளம் ஒன்றை ஏற்படுத்தியது. அது வீசப்பட்டபோது, நான் பதுங்கியிருந்த பங்கர் ஒரு தொட்டிலைப்போல ஆடியது. அதிர்ஷ்டவசமாக அந்த குண்டு வெடிக்கவில்லை. பிறகு புலிகள் அங்கே வந்து அந்தக் குண்டைச் செயலிழக்கச் செய்தனர். அந்தக் குண்டிலிருந்து 600 கிலோ வெடி மருந்தை அவர்கள் எடுத்துச் சென்றனர்.

சில நாட்களுக்குப் பிறகு ஆனந்தபுரம் என்ற ஊரில் நண்பர் ஒருவர் வீட்டில் நான் அமர்ந்திருந்தேன். அப்போது சிங்கள ராணுவத்தின் விமானங்கள் குண்டு வீசுவதற்காக வருவதைப் பார்த்தோம். மக்களெல்லாம் திறந்த வெளியை நோக்கி ஓடினார்கள். திறந்த வெளியில் நின்று கொண்டால் அவர்களெல்லாம் சிவிலியன்கள் என்று நினைத்து ராணுவத்தினர் குண்டு வீசாமல் போய் விடுவார்கள் என்பது அவர்களின் நம்பிக்கையாக இருந்தது. நானும் அங்கே ஓட முயற்சித்தேன். அப்போது எனது நண்பர் என்னைப் பிடித்து இழுத்தார். மேலே பறந்து கொண்டிருந்த விமானத்திலிருந்து 'ஏர் பாம்கள்' வீசப்பட்டன. அந்த வகை குண்டுகள் பூமிக்கு மேலேயே வெடித்துச் சிதறும் தன்மை கொண்டவை. அவை வெடித்தபோது வெட்டவெளியில் நின்று கொண்டிருந்த பதினைந்து பேர் உடல் சிதறி செத்துப் போனார்கள். சில நிமிடங்களில் விமானத்திலிருந்து 'தாமதமாக வெடிக்கும்' (ஸ்லோ பாம்) ஆயிரம் கிலோ எடை கொண்ட குண்டு ஒன்று வீசப்பட்டது. அது அருகாமையிலிருந்த கோயிலின் மீது விழுந்தது. அது விழுந்தபோது ஒரு ஆள், ஒரு ஆடு, சில பாத்திரங்கள் போன்றவையெல்லாம் ஒரு தென்னை மர உயரத்திற்குத் தூக்கி வீசசப்பட்டதை நான் பார்த்தேன்.

இரணபாலையில் நான் தங்கியிருந்தபோது சிங்கள விமானங்கள் நடத்திய குண்டுவீச்சால் ஏராளமான பேர் இறந்து போனதைப் பார்க்க முடிந்தது. பிப்ரவரி மாதம் பதினாறாம் தேதி அங்கு சிங்களப் படை குண்டு வீசியபோது காயம்பட்டவர்களை மீட்கிற பணியில் நானும், நண்பர்களும் ஈடுபட்டோம். குண்டு வீச்சில் கொல்லப்பட்டவர்கள் பெரும்பாலும் பெண்களும், குழந்தைகளும்தான். அவர்கள் தான் வீடுகளில் தங்கியிருந்தார்கள். ஆண்களில் பெரும்பாலோர் பங்கருகளைக் கட்டுகின்ற பணிக்காக வெளியில் சென்றிருந்தார்கள். குடியிருப்புகள் மீது வீசப்பட்ட குண்டுகள் மிகவும் பயங்கரமானவை. அவை வெடித்ததும் அந்தப் பகுதியில் காற்றில் இருக்கும் ஆக்சிஜனை உறிந்து கொள்ளும். அதனால் காற்றில் மிகப் பெரிய வெற்றிடம் உருவாகும். அந்தப் பகுதியிலிருக்கும் எல்லாவற்றையும் ஒரு புள்ளியை நோக்கி அது உறிஞ்சும். இதனால் சுற்றுப்புறத்தில் இருப்பவர்கள் மூச்சடைத்து செத்துப் போவது மட்டுமல்லாமல், அவர்களுடைய உடைகளெல்லாம் நார்நாராகக் கிழிந்து போய்விடும். செத்துக் கிடக்கும் உடல்களெல்லாம் நிர்வாணமாகவே கிடக்கும். அருகாமையிலிருந்த பங்கருக்குள் இளம்பெண்கள் பலர் ஒளிந்து கொண்டிருந்தார்கள். அந்தக் குண்டு வீசப்பட்டதில் எல்லோருமே ஒட்டு மொத்தமாகக் கொல்லப்பட்டார்கள். நான் அவர்களைக் கடந்து ஓடும்போது யாரோ எனது கால்களைப் பிடித்து இழுப்பது தெரிந்தது. திரும்பிப் பார்த்தேன். பதினாறு, பதினேழு வயதிருக்கும் ஒரு இளம் பெண் தன் இரண்டு கைகளாலும் எனது கால்களைப் பிடித்துக் கொண்டிருந்தார். அவரது இடுப்புக்குக் கீழே உடம்பு எதுவுமில்லை. கால்களுக்குப் பதிலாக இரண்டு எலும்புகள்தான் நீட்டிக் கொண்டிருந்தன. ஆனால் அவர் பேசினார். "அண்ணா, நான் உன்னுடைய தங்கையாக இருந்தால் என்னை இப்படி விட்டுவிட்டுப் போவாயா? என்னைக் காப்பாற்று" என்று கதறினார். எனக்குக்கூடப் பிறந்த தங்கை எவரும் கிடையாது. அவரை என்னுடைய தங்கையாகவே அப்போது நான் எண்ணிக் கொண்டேன். திகைத்துப் போய் ஒரு கணம் நின்றேன். அதற்குள் அவருடைய மூச்சு அடங்கி விட்டது. அந்த நேரத்தில் ஒரு பெண் என்னை நோக்கிக் கூவியபடி ஓடி வந்து கொண்டிருந்தார். ஒரு பத்து மீட்டர் தொலைவில் வந்திருப்பார். திடீரென்று அவர் சரிந்து விழுந்தார். கிட்டே சென்று பார்த்தேன். அவரது தலையின் பின்புறம் குண்டு ஒன்றால் பெயர்த் தெடுக்கப்பட்டிருந்தது. அங்கு சுமார் இருபத்தைந்து பெண்களின் சடலங்கள் சிதறிக் கிடந்ததைப் பார்க்க முடிந்தது.

ஒரு நாள் நான் வலைஞர்மடம் பகுதியை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுக் கொண்டிருந்தேன். ஒரு கர்ப்பிணிப் பெண்ணைப் பின்னால் உட்கார வைத்தபடி ஒரு இளைஞன் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். அவர்களுக்கு வழிவிட்டு நான் எனது வண்டியை மெதுவாகச் செலுத்தினேன். அவர்கள் முன்னே சென்றார்கள். சில மீட்டர் தூரத்தில் திடீரென்று அந்த மோட்டார் சைக்கிள் சரிந்து விழுவதைப் பார்த்தேன். அருகில் சென்று பார்த்தபோது, மோட்டர் சைக்கிளை ஓட்டிய கணவன் மீது சிங்கள ராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்ட குண்டு பாய்ந்திருந்தது. அந்தக் கர்ப்பிணிப் பெண் தனது கணவனை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுமாறு என்னிடம் கெஞ்சிக் கதறினாள். அந்தப் பக்கம் போய்க் கொண்டிருந்த ஒருத்தர்கூட அங்கே நின்று என்ன எதுவென்று அந்தப் பெண்ணிடம் விசாரிக்கவில்லை. அந்தப் பெண்ணின் கணவனுடைய முகத்தில் குண்டு பாய்ந்திருந்தது. அவனது கீழ்த்தாடை சுத்தமாகப் பிய்ந்தெறியப்பட்டிருந்தது. வாயிலிருந்து ரத்தம் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது. அவன் உயிர் பிழைப்பான் என்ற நம்பிக்கை எனக்கில்லை. அந்தப் பெண்ணின் கதறலைப் பொருட்படுத்தாமல் தலையைக் குனிந்தபடி நானும் அவர்களைக் கடந்து செல்லவே விரும்பினேன். அப்படிப் போவது எங்களுக்கெல்லாம் நன்றாகப் பழகிப் போயிருந்தது. தலையைக் குனிந்தபடி போகவில்லையென்றால் ஒளிந்திருக்கும் சிங்கள ராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு எந்தக் கணமும் பலியாக நேரலாம் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், அப்போது அந்த இளைஞனை நான் மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஆசைப்பட்டேன். மோட்டார் சைக்கிளில் எனது பின்புறமாக அவனை ஏற்றி என் மீது சாய்த்து வைக்கும்படி அவனது மனைவியிடம் சொன்னேன். அவனைச் சுமந்தபடி நான் மருத்துவமனைக்குச் சென்று சேர்ந்தேன். இறங்கும்போதுதான் தெரிந்தது, ஏற்கனவே அவன் இறந்து போயிருந்தான்.

ஒரு நாள் காலையில் நான் போய்க் கொண்டிருந்த போது ஒரு ஆர்.பி.ஜி. ஷெல் எனக்கு முன்னால் விழுந்து வெடிப்பதைப் பார்த்தேன். திரும்பி ஓடினேன். எதிரே வந்தவர்களிடத்தில் அங்கே போகாதீர்கள். ஆர்மிக்காரன் சுடுகிறான் என்று கத்தினேன். ஆனால், எவரும் என்னைப் பொருட்படுத்தவில்லை. ஒரு புறம் குண்டுகள் விழுந்து வெடித்துக் கொண்டிருக்க, மக்கள் தங்கள் பாட்டுக்குப் போய்க் கொண்டே இருந்தார்கள். எங்கள் வாழ்க்கை அப்படி ஆகிப் போயிருந்தது. ஒரு புறம் பங்கருக்குள் குழந்தைகள் ஒளிந்திருப்பார்கள். பக்கத்தில் சில குழந்தைகள் பட்டம் விட்டு விளையாடிக் கொண்டிருப்பார்கள். எப்போது வேண்டுமானாலும் ஒரு குண்டு விழலாம். தங்கள் உயிர் போகலாம் என்பது குழந்தைகளுக்குக்கூட நன்றாகத் தெரிந்திருந்தது. ஆனால், மரணத்தைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் அவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

மே மாதம் முதல் வாரத்தில் நான் முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்தேன். தொடர்ந்து நாங்கள் இருந்த பகுதியின் மீது சிங்கள ராணுவத்தின் குண்டுகள் பொழிந்து கொண்டிந்தன. எங்கு பார்த்தாலும் காயம் பட்டவர்கள், உயிரிழந்தவர்கள் என்று கோரக் காட்சிகள். உணவு கிடையாது. மனிதர்கள் பங்கருக்கு உள்ளேயும், வெளியேயும் செத்துக் கொண டிருந்தார்கள். உயிர் வாழ்வதைப் பற்றி எவருக்குமே கவலையில்லை. அங்கிருந்த மருத்துவமனை செயல் படாமல் கிடந்தது. மருந்துகளோ, மருத்துவர்களோ இல்லை. எப்போது வேண்டுமானாலும் மரணம் தாக்கலாம் என்ற நிலையில் அங்கிருந்தவர்கள் தமது உறவினர்களோடு நெருக்கமாக இருக்க விரும்பியதைப் பார்த்தேன். சாகும்போது எல்லோரும் ஒன்றாகச் சாக வேண்டும். ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து விடக் கூடாது என்பது மட்டும்தான் அங்கிருந்தவர்களின் ஒரே எண்ணமாக இருந்தது. போராளிகளுக்கும் எந்தவித வாய்ப்பும் இருக்கவில்லை சண்டை போடுவது அல்லது சாவது என்ற நிலையில் அவர்கள் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். அங்குதான் நான் அதுவரை பார்த்திராத இனி மேல் ஒரு போதும் பார்க்க விரும்பாத அந்தக் காட்சியைப் பார்த்தேன். பசி கொண்ட நாய்கள் சுற்றிலும் சிதறிக் கிடந்த மனிதர்களின் உடல் உறுப்புகளைக் கடித்துக் குதறி தங்கள் பசியை ஆற்றிக் கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் மரணத்தின் துர்நாற்றம். சாவுப் பறை அடிப்பது போல குண்டுகள் தொடர்ந்து வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன.


மே மாதம் பதினாறாம் தேதி மாலை

*(4 ஆம் பக்கம்)*

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# இளம்பிள்ளை பயிற்சி முகாம் காட்சிகள்









படங்கள்: பவளத்தானூர் தனசேகரன்

*(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

*நாங்களெல்லாம் தப்பித்து ஓடிக் கொண்டிருந்தோம். சாலை ஓரங்களில் காயம் பட்ட போராளிகள் குவியல் குவியலாகக் கிடந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் பெண்கள். அவர்களைக் காப்பாற்றுவதற்கு செஞ்சிலுவை சங்கத்தை சிங்கள ராணுவம் அனுமதிக்க வில்லை. ‘யாராவது சயனைடு கொடுத்து எங்களைக் கொன்று விடுங்களேன்’ என்று அந்தப் பெண்கள் கதறிக் கொண்டிருந்தார்கள். மிகவும் சிறு வயதுப் பெண்கள். இந்த உலகத்தையோ, தங்களுடைய விதியையோ அறியாத பெண்கள். அன்றிரவு எங்காவது படுத்துத் தூங்க வேண்டும் என்று பாதுகாப்பாய் ஒரு இடத்தைத் தேடினேன். ஒரு டிராக்டர் நின்று கொண்டிருந்தது. அதன் கீழே பாயைப் போர்த்திக் கொண்டு ஒருத்தர் படுத்திருப்பது தெரிந்தது. நானும் இங்கே படுத்துக் கொள்கிறேன் என்று அவரிடம் சொன்னேன். அவர் அமைதியாக இருந்தார். சரியென்று நான் அவர் அருகில் படுத்துக்கொண்டேன். காலை விழுத்தெழும் போதுதான் என்னருகில் படுத்திருந்தது ஒரு மனிதர் அல்ல. இரண்டு மூன்றுநாட்களுக்கு முன்பே கொல்லப்பட்ட ஒருத்தரின் பிணம் என்பது தெரிந்தது.*

*அய்யகோ! தமிழா இதுவா உன் நிலை?*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 27th May 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.